# திரண்டு வரும் துயரமும், அதிகரிக்கும் பாதிப்புறும் நிலைகளும்: கிழக்கு மாகாணத்தில் டித்வா புயலின் தாக்கம்

அக்டோபர் 2026

அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம்
ADAYAALAM CENTRE FOR POLICY RESEARCH



## திரண்டு வரும் துயரமும், அதிகரிக்கும் பாதிப்புறும் நிலைகளும்: கிழக்கு மாகாணத்தில் டித்வா புயலின் தாக்கம்

### அறிமுகம்

நவம்பர் 28‚ 2026 அன்று டித்வா புயல் இலங்கையில் பேரழிவை ஏற்படுத்தியது. கிழக்குக் கரையோரப் பிரதேசத்தை இந்த புயல் தாக்குவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே, பலத்த காற்றும் இடையிடையே கடும் மழையும் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து பாரிய அளவிளான வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டது. அது மேலும் நாட்டின் உட்பகுதியை நோக்கி நகர்ந்தபோது, மலையகப் பகுதிகளில் கிராமங்களை முழுமையாக மண்ணுக்குள் புதைக்கும் அளவுக்கு மண் சரிவுகளை ஏற்படுத்தியது. இறுதியாக, அது மேற்குக் கரையை அடைந்தபோது, ஆறுகள் மற்றும் நிரம்பி வழிந்த வடிகால்களில் இருந்து பெருக்கெடுத்த நீரால், சனநெருக்கடி மிகுந்த நகர்ப்புறப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. டித்வா சென்ற இடமெல்லாம், அது பெரும் பேரழிவின் தடங்களை விட்டுச் சென்றது. இதன் நேரடித் தாக்கத்தினால் 600க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன், மேலும் 173 பேர் காணாமல் போயுள்ளனர்.[1] இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர்.[2] உடனடியாகக் தெரியக்கூடியதும் அளவிடக்கூடியதுமான பாதிப்புகளுக்கு அப்பால், ஏற்கனவே பாதிப்புறும் நிலையில் இருந்த மக்களின் வாழ்வாதாரங்களையும் டித்வா புயல் நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையில் பாதித்தது.

அனர்த்தங்கள் ஏற்கனவே நிலவும் பாதிப்புறும் நிலைகளை மேலும் தீவிரப்படுத்தி, அவற்றுடன் ஒன்றிணைந்து தாக்கத்தை அதிகரிப்பதால், அவை மக்களை சம அளவில் பாதிப்பதில்லை. டித்வா தொடர்பாக UNDP குறிப்பிட்டுள்ளதுபோல், “*தாக்கமும் கட்டமைப்பு ரீதியான பாதிப்புறும் நிலையும் சந்திக்கும் இடங்களிலேயே மிக உயர்ந்த ஆபத்துகள் உருவாகின்றன*”.[3] அரசியல் தீர்மானங்கள், சமூக, பொருளாதார மற்றும் மனித உரிமைகளின் மீறல்கள், அத்துடன் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த சமூகப் படிநிலைகள் மற்றும் முரண்பாடுகள் ஆகியவற்றின் ஊடாக இந்த சமமற்ற தன்மை சமூக மற்றும் அரசியல் ரீதியாக உருவாக்கப்படுகின்றது. எனவே, அனர்த்தங்கள் ஒருபோதும் முற்றிலும் இயற்கையானவை அல்ல; ஏனெனில் அவற்றில் எப்போதும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒரு கூறும் காணப்படுகின்றது. எனவே, அனர்த்தங்கள் ஒரு நுணுக்குக் காட்டியைப் போன்று செயற்பட்டு, சமத்துவமின்மைகளை மிகத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன; வெளிப்படையான உரிமை மீறல்களை வெளிக்கொணர்கின்றன; மேலும் ஆட்சி தொடர்பான அம்சங்களையும் வெளிச்சத்துக்கு கொண்டு வருகின்றன.

நீண்டகாலமாக நிலவிவரும் முறைமைசார் பாகுபாடு டித்வா புயலின் தாக்கத்தை மேலும் தீவிரப்படுத்தியுள்ளதாக Human Rights Watch அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.[4] அதேவேளை, மலையக சமூகத்தினரின் காணி உரிமைகள் மறுக்கப்பட்டமை போன்ற கடந்தகால உரிமை மீறல்களுக்கும் அனர்த்தத்தின் தாக்கத்திற்கும் இடையிலான தொடர்புகளை செயற்பாட்டாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.[5] மேலும், நிவாரணச் செயன்முறை பாதுகாப்புமயப்படுத்தப்பட்டமை[6] மற்றும் நாடளாவிய ரீதியில் அவசரகால நிலை

---

[1] As of January 2026: Disaster Management Centre (DMC) & Department of National Planning (NPD), *Post-Disaster Needs Assessment Cyclone Ditwah*, Sri Lanka 2025, March 2026 https://www.dmc.gov.lk/images/pdfs/PDNA_Full_Report_Final%20Updated.pdf.

[2] International Organization for Migration (IOM), *Global Data Institute, Displacement Tracking Matrix, Sri Lanka*, December 2025 https://dtm.iom.int/sri-lanka.
As of 20th March 2026, 149.000 people were still displaced: UN OCHA, Office of the Resident Coordinator Sri Lanka, *Sri Lanka: Cyclone Ditwah - Situation Report No. 10 (As of 20 March 2026)*, 20th March 2026 https://www.unocha.org/publications/report/sri-lanka/sri-lanka-cyclone-ditwah-situation-report-no-10-20-march-2026.

[3] UNDP, *Mapping the Initial Impact of Cyclone Ditwah in Sri Lanka. Section: Multidimensional Vulnerability*, 30th January 2026 https://geosmart.undp.org/arcgis/apps/storymaps/stories/25866fbc805c4d70b6bf35c23f896daf#ref-n-czE7Ht.

[4] Meenakshi Ganguly, *Sri Lanka Struggles in Aftermath of Devastating Cyclone. Longstanding Discrimination Against Marginalized Communities Worsens Catastrophe*, Human Rights Watch (HRW), Dispatches, 11th December 2025 https://www.hrw.org/news/2025/12/11/sri-lanka-struggles-in-aftermath-of-devastating-cyclone.

[5] Sri Lanka Brief, *Joint Statement: The Demands of Malaiyaha Tamil Families Affected by Cyclone Ditwah Calling for the Attention of President*, 30th March 2026 https://srilankabrief.org/joint-statement-the-demands-of-malaiyaha-tamil-families-affected-by-cyclone-ditwah-calling-for-the-attention-of-president/;
Methmalie Dissanayake, *Cyclone Ditwah: The ongoing crisis of Malaiyaha Tamils*, The Morning, 25th January 2026 https://www.themorning.lk/articles/DyGIMNLRG6o7GAXLXaGE; Raisa Wickrematunge, *Cyclone Ditwah and Sri Lanka’s disastrous flood mismanagement*, Himal Southasian, 4th December 2025 https://www.himalmag.com/sri-lanka-cyclone-ditwah-floods-landslides/.

[6] Sri Lanka Brief, *Militarisation of Post Ditwah Relief: MOD Issues Guidelines for Accelerated Disaster Relief Operations*, 15th December 2025

பிரகடனப்படுத்தப்பட்டமை குறித்தும் அவதானிப்பாளர்கள் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.[7] மேலும், 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டம் மீறப்பட்டமை உள்ளடங்கலாக கடுமையான ஆட்சியியல் தோல்விகளையும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.[8] மிகவும் தாமதமாக மக்களைச் சென்றடைந்த அனர்த்த எச்சரிக்கை போதிய தயார் நிலை காணப்படாததை வெளிப்படுத்தியுள்ளது.[9] மேலும், கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களில் பெருமளவானோர் தமிழ் பேசும் சமூகங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், எச்சரிக்கைகள், நிவாரணம் தொடர்பான தகவல்கள், அரசாங்கத்தின் நிலைமைப் புதுப்பிப்புகள் மற்றும் ஊடகவியலாளர் சந்திப்புகள் உள்ளிட்ட அரசாங்கத் தகவல் தொடர்புகள் தமிழில் அரிதாகவே கிடைக்கப்பெற்றன.[10] இதனால் தமிழ் பேசும் மக்களுக்கு சூறாவளியினால் ஏற்பட்ட ஆபத்து மற்றும் தாக்கம் என்பன மேலும் தீவிரமடைந்தன. எனவே, செம்மணி என்பது "*தனது சொந்த கடந்தகாலத்தை எதிர்கொண்டு, தனது சட்டபூர்வக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான இலங்கை அரசின் விருப்பத்தையும் ஆற்றலையும் பரிசோதிக்கும் ஒரு சோதனையாக*"[11] இருப்பதைப் போலவே, டித்வாவும் சிறுபான்மையினருக்கு NPP வழங்கிய வாக்குறுதிகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதுடன், மேட்டுக் குடியினருக்கும் சலுகை பெற்றவர்களுக்கும் மட்டுமன்றி, பாதிப்புறும் நிலையிலுள்ள குழுக்களுக்கும் ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கும் உரிய அரசாங்கமாகச் செயற்படுவதற்கான அதன் அர்ப்பணிப்பையும் சோதனைக்கு உட்படுத்துகின்றது.

பாதிப்புறும் நிலையிலுள்ள, போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீது டித்வா புயல் ஏற்படுத்திய தாக்கங்களையும், அவர்களது சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் மீறப்பட்டமையையும் பல்வேறு ஆதாரங்களின் ஊடாக ஒப்பிட்டு உறுதிப்படுத்துவதற்காக, அடையாளம் நிறுவனம் 2026 ஜனவரி முதல் மே மாதம் வரை கிழக்கு மாகாணத்தில் ஆய்வொன்றை மேற்கொண்டது. இந்தச் சுருக்க அறிக்கையின் முக்கிய சுருக்கமானது, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள், இயலாமை கொண்ட மக்கள், முன்னாள் போராளிகள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள் மற்றும் கவனக் குழுக் கலந்துரையாடல்களின் (FGDs) முக்கிய கண்டறிதல்களைத் தொகுத்து வழங்குகின்றது.

---

https://srilankabrief.org/militarisation-of-post-ditwah-relief-mod-issues-guidelines-for-accelerated-disaster-relief-operations/

[7] Centre for Policy Alternatives (CPA), *Statement on the Declaration of Emergency and Emergency Regulations Promulgated on the 28.11.2025*, 1st December 2025 https://www.cpalanka.org/statement-on-the-declaration-of-emergency-and-emergency-regulations-promulgated-on-the-28-11-2025/; Human Rights Commission of Sri Lanka, *Observations and Recommendations on the Emergency (Miscellaneous Provisions and Powers) Regulations, No. 1 of 2025*, 5th December 2025 https://www.hrcsl.lk/wp-content/uploads/2025/12/HRCSL-Letter-to-the-HE-President-on-05_12_2025-compressed.pdf.
See for an overview over legal and administrative measures with regard to Ditwah Law & Society Trust (LST), *Government Legal and Administrative Measures Following Cyclone Ditwah*, March 2026 https://lst.lk/wp-content/uploads/2026/03/Government-Measures-Post-Ditwah-2.pdf.

[8] Pitasanna Shanmugathas, *One of the World's Most Climate-Vulnerable Nations, One of the Least Prepared: Sri Lanka's Deadly Choice*, JURISTnews, 21st December 2025 https://www.jurist.org/features/2025/12/21/one-of-the-worlds-most-climate-vulnerable-nations-one-of-the-least-prepared-sri-lankas-deadly-choice/;
Centre for Policy Alternatives (CPA), *Key Short-Term and Long-Term Issues to Consider for Post-Cyclone Ditwah Recovery*, 16th December 2025 https://www.cpalanka.org/key-short-term-and-long-term-issues-to-consider-for-post-cyclone-ditwah-recovery/.

[9] Murali Krishnan, *Sri Lanka cyclone tragedy exposes government failures*, Deutsche Welle, 2nd December 2025 https://www.dw.com/en/sri-lanka-cyclone-tragedy-exposes-government-failures/a-74985337;
Lionel Bopage, *Ceylon Ditwah: A Preventable Tragedy*, Groundviews, 6th December 2025 https://groundviews.org/2025/12/06/cyclone-ditwah-a-preventable-tragedy/.

[10] Murali Krishnan, *Sri Lanka cyclone tragedy exposes government failures*, Deutsche Welle, 2nd December 2025 https://www.dw.com/en/sri-lanka-cyclone-tragedy-exposes-government-failures/a-74985337;
Lionel Bopage, *Ceylon Ditwah: A Preventable Tragedy*, Groundviews, 6th December 2025 https://groundviews.org/2025/12/06/cyclone-ditwah-a-preventable-tragedy/.

[11] Adayaalam Centre for Police Research, *Situation Brief No. 7: The Test: Chemmani and Sri Lanka's Accountability Crisis*, October 2025, p. 2 https://adayaalam.org/wp-content/uploads/2025/10/The-Test-Chemmani-and-Sri-Lankas-Accountability-Crisis_16.10.2025.pdf.

## 1. பாதிப்புறும் நிலையை இயல்பானதாக்குதல்

கிழக்கு மாகாணத்தில் டித்வா புயலால் பாதிக்கப்பட்டு, தாமாகவே தமது நிலைமையைச் சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ள பலர், NPP அரசாங்கத்தின் அபிலாஷைகளுக்கும் கள யதார்த்தத்திற்கும் இடையில் காணப்படும் இடைவெளியைச் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த இடைவெளிக்கான காரணங்கள் எவை? முதலாவதாக, அரச அதிகாரிகள் அனர்த்தத்தையும் அதனால் ஏற்படும் பாதிப்புறும் நிலையையும் இயல்பான ஒன்றாகக் கருதியதுடன், மக்கள் எதிர்கொண்ட துன்பங்களின் தீவிரத்தையும் குறைத்து மதிப்பிட்டனர். இரண்டாவதாக, இது தயார்நிலை இன்மையையும் குறைவான நிவாரண நடவடிக்கைகளுக்கும் வழிவகுத்தது. மூன்றாவதாக, கிழக்கில் நிலவும் இராணுவ ஆக்கிரமிப்பும் உட்கட்டமைப்புப் பிரச்சினைகளும், பாதிப்புறும் நிலையிலுள்ள குழுக்களை அனர்த்த அபாயங்களுக்கு மேலும் அதிகமாக வெளிப்படுத்தின.

அரச அதிகாரிகள் அடிக்கடி மலையகப் பிரதேசத்துடன் ஒப்பீடுகளை மேற்கொண்டு, கிழக்கில் டித்வா புயல் ஏற்படுத்திய தாக்கங்களின் தீவிரத்தைக் குறைத்து மதிப்பிட்டனர்.[12] பரவலாகக் காணப்பட்ட இந்த மனப்பாங்கு, தாமதமானதும் போதியளவு இல்லாததுமான பதில் நடவடிக்கைகளுக்கு வழிவகுத்தது. மேலும், போதிய ஆதாரமின்றி ஒட்டுமொத்தமாக "*பாதிக்கப்படாதவை*" எனப் பொதுப்படையாக அறிவிக்கப்பட்ட முழுப் பிரதேசங்களும் நிவாரண உதவிகள் வழங்கும் நடவடிக்கைகளிலிருந்து தவிர்க்கப்பட்டன.[13] மேலும், அடிக்கடி வெள்ளப்பெருக்கிற்கு உள்ளாகும் பிரதேசங்கள், அவை இயல்பாகவே வெள்ள அபாயத்திற்கு உட்படும் பகுதிகள் என்பதையும், அங்கு வாழும் மக்கள் "*அதற்குப் பழக்கப்பட்டவர்கள்*" என்பதையும் காரணமாகக் கொண்டு நிவாரண உதவிகளிலிருந்து விலக்கப்பட்டன.[14]

இந்த இயல்பாக்கம் தயார்நிலை இன்மையையும் ஏற்படுத்தியது.[15] சில இடங்களில், அனர்த்த முகாமைத்துவப் அலகு முற்றாகவே செயற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.[16] கல்முனையில், மக்களை ஏற்றிச் செல்வதற்கும் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவதற்கும், நிவாரண உதவிகளை வழங்குவதற்கும் போதுமான படகுகள் கிடைக்கவில்லை.[17] மட்டக்களப்பில், அமைச்சர் ஒருவர் வருகை தந்த பின்னரே அனர்த்தம் தொடர்பான கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.[18] மக்களுக்கு உரிய நேரத்தில் எச்சரிக்கை விடுக்கத் தவறியமை மிகவும் பாரதூரமான குறைபாடுகளில் ஒன்றாகக் காணப்பட்டது.[19]

மேலும், பல இடங்களில் யார் நிவாரண உதவிகளைப் பெற வேண்டும், யார் பெறக்கூடாது என்பதைத் தீர்மானிப்பதற்காக அரச அதிகாரிகள் தன்னிச்சையான வரையறைகளை வகுத்தனர். உதாரணமாக, ஆற்று நீர் வீடுகளுக்குள் புகுந்திருந்ததா இல்லையா என்பதன் அடிப்படையில் இத்தகைய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.[20] மேலும், மட்டக்களப்பில் நாம் உரையாடிய அரச அதிகாரிகள், நிவாரண உதவிகள் டித்வா புயலுடன் தொடர்புடைய சேதங்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்றும், "வழமையான வெள்ளப்பெருக்கினால்" ஏற்பட்ட சேதங்களுக்கு வழங்கப்படக்கூடாது என்றும் நியாயப்படுத்தினர்.[21]

பாதிப்புறும் நிலையை மேலும் தீவிரப்படுத்தி, அதனைத் தொடர்ச்சியான ஒன்றாக மாற்றிய உட்கட்டமைப்புப் பிரச்சினைகள் குறித்தும் மக்கள் குறிப்பிட்டனர். இந்தப் பிரச்சினைகளில், 2004 சுனாமிக்குப் பின்னர் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட தாழ்நில சதுப்பு நிலப் பகுதிகளும், போதியளவு வடிகால் முறைமைகள் இல்லாததும் உள்ளடங்குகின்றன.[22]

கிழக்கில் பரவலாக நிலவும் இராணுவமயமாக்கல், அனர்த்த அபாயம் அதிகமுள்ள பகுதிகளில் வாழும் மக்களை மீள்குடியேற்றுவதற்குத் தேவையான காணிகளின் பற்றாக்குறைக்கு குறிப்பிடத்தக்க அளவில் பங்களிக்கிறது என செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டினர்.[23] கால்நடை மேய்ச்சல் நிலங்கள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டதன் விளைவாக, கால்நடைகளுக்கும் உள்ளூர் விவசாயிகளின் வாழ்வாதாரங்களுக்கும் ஏற்பட்டுள்ள ஆபத்துகள் தொடர்பான பல உதாரணங்களும்

---

[12] Interview with GS A in Batticaloa District in February 2026; Interview with women's activist B in Batticaloa District in January 2026.

[13] Interview with women's activist B in Batticaloa District in January 2026; Interview with a female former combatant with a disability who is also an activist in Batticaloa District in February 2026; Interview with a female former combatant with a disability in Batticaloa District in January 2026.

[14] Interview with an activist and family member of a forcibly disappeared person in Batticaloa District in February 2026.

[15] Interview with women's activist C in Batticaloa District in February 2026.

[16] Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026.

[17] FGD with DS officers in Kalmunai in February 2026.

[18] Interview with a female former combatant with a disability in Batticaloa District in January 2026.

[19] Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026.

[20] Interview with woman A with a disability who is also an activist in Batticaloa District in February 2026; Interview with women's activist B in Batticaloa District in January 2026; Interview with women's activist D in Batticaloa District in January 2026.

[21] Interview with GS A in Batticaloa District in February 2026; Interview with GS B in Batticaloa District in February 2026.

[22] FGD with DS officers in Kalmunai in February 2026.

[23] Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026.

காணப்பட்டன.[24] கட்டுப்படுத்தப்படாத சட்டவிரோத மணல் அகழ்வு போன்ற செயற்பாடுகள், மக்களை அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்குகளுக்கு ஆளாக்குவதன் மூலம் அவர்களின் பாதுகாப்பிற்கு மேலும் ஆபத்தை ஏற்படுத்துகின்றன.[25]

இந்த எடுத்துக்காட்டுகள், இயற்கையானவை போன்று தோன்றும் அனர்த்தங்கள் எவ்வாறு அரசியல் ரீதியாக உருவாக்கப்படுகின்றன என்பதை பின்வரும் உதாரணங்கள் சுட்டிக்காட்டுகின்றன: வருடாந்த வெள்ளப்பெருக்குகள் மற்றும் அனர்த்தங்களை எதிர்கொள்வதற்குப் போதிய முன்தயாரிப்புகளை மேற்கொள்ளத் தவறுதல்; சுற்றுச்சூழலைச் சேதப்படுத்தும் சட்டவிரோத மணல் அகழ்வு போன்ற செயற்பாடுகளுக்கு எதிராக உறுதியான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை; வடிகால் முறைமை போன்ற உட்கட்டமைப்புப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமை; அத்துடன், பரந்தளவிலான நெல் வயல்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்களையும், அனர்த்த அபாயம் அதிகமுள்ள பகுதிகளில் வாழும் மக்களை மீள்குடியேற்றக்கூடிய காணிகளையும் விடுவிக்காமை ஆகியவற்றின் காரணமாக, குறிப்பாக சிறுபான்மைச் சமூகங்களையும் பாதிப்புறும் நிலையிலுள்ள குழுக்களையும் சேர்ந்த மக்கள் அனர்த்தங்களால் பாதிக்கப்படும் அளவுக்கதிகமான அபாயத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இந்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், பாதிப்புறும் நிலை என்பது கொள்கைத் தீர்மானங்கள், காணி உரிமை மீறல்கள் மற்றும் பொறுப்புக்கூறலின்மை ஆகியவற்றின் விளைவாக உருவாகினறது.. எனினும், அவசர நடவடிக்கை தேவைப்படும் நெருக்கடிகளாக அனர்த்தங்களைக் கையாளுவதற்குப் பதிலாக, அவை பொதுவான அன்றாட நிகழ்வுகளாகப் பொதுமைப்படுத்தப்பட்டு, இவ்வாறு இயல்பானவையாக மாற்றப்படுகின்றன.

## 2. சமத்துவமும் ஒப்புரவும் - கவனிக்கப்படாமல் கைவிடப்படும் மக்கள்

நிவாரணப் பகிர்ந்தளிப்பில் காணப்பட்ட சமத்துவமின்மை எமது ஆய்வு முழுவதும் வெளிவந்த மையக் கருப்பொருட்களில் ஒன்றாக அமைந்துள்ளது. மேலும், குறிப்பிட்ட மக்கள் குழுக்களின் பாதிப்புறும் நிலை, அவர்களுக்குரிய விசேட தேவைகள் மற்றும் நிவாரண உதவிகளை அணுகுவதில் அவர்கள் எதிர்கொள்ளும் தடைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளும் ஒப்புரவுக் கோட்பாடுகள் பின்பற்றப்படவில்லை. இதன் விளைவாக, பலர் நிவாரண உதவிகளிலிருந்து விடுபட்டு, கவனிக்கப்படாமல் போயினர்.

பாதிப்புறும் நிலையிலுள்ள குழுக்களுக்கென விசேட ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாததால், அனர்த்த நிவாரண உதவிகளை அணுகுவதில் அக்குழுக்கள் ஏற்கனவே எதிர்கொண்ட கட்டமைப்பு ரீதியான தடைகள் மேலும் தீவிரமடைந்தன. நிவாரண உதவிகளைப் பெறுவதற்கு பொதுவான தகைமை அளவுகோல்களை சுற்றுநிருபங்கள் நிர்ணயித்திருந்தன.[26] இதன் விளைவாக, நிவாரண உதவிகளின் விநியோகம் அனைவருக்கும் ஒரே மாதிரியான அணுகுமுறையைப் பின்பற்றும் வகையில் அமைந்தது. இயலாமை கொண்ட மக்கள் போன்ற பாதிப்புறும் நிலையிலுள்ள குழுக்களுக்கென, அவர்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட கொள்கைகளோ விசேட ஏற்பாடுகளோ இல்லாமை, அவர்களின் பாதிப்புறும் நிலையை மேலும் தீவிரப்படுத்தியது.[27]

டித்வா புயலைத் தொடர்ந்து வாழ்க்கைச் செலவுகள் பெருமளவில் அதிகரித்தமையால், ஏற்கனவே நிலவிய இத்தகைய பாதிப்புறும் நிலைகள் மேலும் தீவிரமடைந்தன. இந்த வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, ஏற்கனவே ஓரங்கட்டப்பட்டிருந்த குழுக்களை மிகவும் கடுமையாகப் பாதித்தது.[28] இயலாமை கொண்ட மக்களுக்கு மேலதிகமாக, முன்னாள் போராளிகள், சாதி அடிப்படையிலான தொழில்களில் ஈடுபடுபவர்கள், கரையோர வேடுவர்கள்(கரையர்) மற்றும் தெலுங்கு மொழி பேசும் மக்கள் (அஹிகுண்டக) ஆகியோரும் இக்குழுக்களில் உள்ளடங்குகின்றனர்.[29]

ஒருபுறம், பாதிப்பை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட குறுகிய அளவுகோல்களாலும், மறுபுறம், மிகப் பொதுமைப்படுத்தப்பட்ட நிவாரணத் தகைமை அளவுகோல்களாலும் ஒப்புரவை உறுதிப்படுத்துவது தடைப்பட்டது. உதாரணமாக, சிறிய அளவிலான வர்த்தகங்களில் ஈடுபடுபவர்கள், முறைசாராத் தொழிலாளர்கள், சிறிய அளவிலான விவசாயிகள் மற்றும் ஒதுக்கீடு செய்யப்படாத காணிகளில் வசிப்பவர்கள் நிவாரண உதவிக் கட்டமைப்புகளின் இடைவெளிகளுக்குள் சிக்கி, உரிய உதவிகளைப் பெற முடியாமல் போனமை தொடர்பான அனுபவங்கள் எமது ஆய்வில் பரவலாகக் காணப்பட்டன.[30]

---

[24] FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026.

[25] Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026.

[26] Interview with leading government officer A in Batticaloa District in February 2026; FGD with DS officers in Kalmunai in February 2026.

[27] Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026; Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026; Interview with woman B with a disability who is also an activist in Batticaloa District in February 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026.

[28] Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026; Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026.

[29] Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026; Interview with women’s activist B in Batticaloa District in January 2026.

[30] Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026; Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with

மேலும், இழப்பீட்டுளுக்கான கொள்கைகள் கட்டுப்பாடுகள் மிக்கவையாக இருந்ததுடன், சுற்றுநிருபங்களும் தன்னிச்சையான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டன.[31] உதாரணமாக, நிவாரண உதவிகளைப் பெறுவதற்குத் தகுதியானவர்களாகக் கருதப்படுவதற்கு தங்குவதற்கு பொருத்தமான வசதிகள் இல்லாத நிவாரண முகாம்களில் தங்கியிருக்க வேண்டும் என மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர்.[32]

மற்றுமொரு பாரதூரமான பிரச்சினை என்னவெனில், அவசரகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தின் பதில் நடவடிக்கைகள் பெரும்பாலும் போதுமானதாக இருக்கவில்லை என்பதுடன், அவை ஆபத்தான அளவிற்குத் தாமதமடைந்திருந்தன. அனர்த்தம் நிகழ்ந்து ஒரு வாரம் முழுமையாகக் கடந்த பின்னரும் சில பாதிக்கப்பட்ட மக்களக்கு அரசாங்க உதவிகள் சென்றடையவில்லை.[33]

இந்தக் கட்டமைப்பு ரீதியான தோல்விகளும், அரசினால் மேற்கொள்ளப்பட்ட நிவாரண உதவி விநியோகத்தில் சமத்துவம் மற்றும் ஒப்புரவு இல்லாமையும், அடிமட்ட அமைப்புகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் நிவாரண உதவிகளை வழங்குவதில் இன்றியமையாத பங்காற்ற வேண்டிய நிலையை ஏற்படுத்தின.[34] குறிப்பாக, பாதிப்புறும் நிலையிலுள்ள குழுக்களைப் பராமரிப்பதில் காணப்பட்ட இத்தகைய ஏற்பாட்டியல் மற்றும் நிறுவன ரீதியான இடைவெளிகளை நிரப்புவதற்காக அரச அதிகாரிகள் அரச சார்பற்ற நிறுவனங்களை (NGOs) பெருமளவில் சார்ந்திருந்தனர்.[35] இத்தகைய நிலையிலும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர, மேலும் விரோதப் போக்குகளுக்கும் முகங்கொடுத்தனர். உதாரணமாக, பாதிப்புறும் நிலையிலுள்ள குழுக்களுடன் நீண்டகாலமாகப் பணியாற்றி வரும் அடிமட்ட அமைப்புகளைச் சேர்ந்த செயற்பாட்டாளர்கள், அனர்த்த முகாமைத்துவ மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைகளிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர்.[36] வேறு சில சந்தர்ப்பங்களில், சுயாதீன நிவாரணக் குழுக்களின் நிவாரணப் பணிகளுக்கு அரச அதிகாரிகள் தீவிரமான தடைகளை ஏற்படுத்தினர். இதன் காரணமாக, அக்குழுக்கள் அரச கட்டமைப்புகளைத் தவிர்த்து நேரடியாகச் செயற்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.[37] மேலும், அதிகாரத்துவ மற்றும் அரசியல் ரீதியான தடைகள் சிவில் சமூக அமைப்புகளின் பணிகளுக்குத் தடையாக அமைந்தன. இயலாமை கொண்ட மக்களின் சங்கங்கள் எதிர்கொண்ட கட்டுப்பாடுகள் இங்கு உதாரணமாகக் குறிப்பிடப்பலாம். டித்வா புயலின் போது அவர்கள் விரைவாக நிவாரண உதவிகளை வழங்குவதற்குத் தடையாக அமைந்தன.[38]

அனர்த்த முகாமைத்துவம் ஒரு பரந்தஅம்சமாக வெளிப்படுத்தப்பட்டதுடன் அது சமத்துவம் அல்லது ஒப்புரவின் கோட்பாடுகளைப் பின்பற்றி முன்னெடுக்கப்படவில்லை. இதன் விளைவாக, குறிப்பிட்ட குழுக்கள் எதிர்கொள்ளும் ஒன்றோடொன்று சேர்ந்து தீவிரமடைந்த பாதிப்புறும் நிலைகளை அடையாளம் காண்பதிலும், நிவாரண நடவடிக்கைகளைத் திட்டமிட்டு ஒருங்கிணைக்கும்போது அவர்களுக்குரிய விசேட தேவைகளைக் கருத்திற்கொள்வதிலும் முறைமைசார் தோல்விகள்

---

disabilities and staff from an association for people with disabilities in February 2026; Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026; Interview with women's activist D in Batticaloa District in January 2026.

[31] FGD with DS officers in Kalmunai in February 2026; Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026; Interview with women's activist D in Batticaloa District in January 2026; Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026; Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026.

[32] Interview with women's activist B in Batticaloa District in January 2026; Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026; Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026; Interview with woman B with a disability who is also an activist in Batticaloa District in February 2026.

[33] Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026; Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026.

[34] Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026.

[35] Interview with GS A in Batticaloa District in February 2026; Interview with leading government officer A in Batticaloa District in February 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026; Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026.

[36] Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026; Interview with a female former combatant with a disability in Batticaloa District in January 2026; Interview with women's activist D in Batticaloa District in January 2026.

[37] FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026; Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026.

[38] Interview with woman B with a disability who is also an activist in Batticaloa District in February 2026; Interview with an activist for people with disabilities in Batticaloa District in February 2026; Interview with a female former combatant with a disability in Batticaloa District in January 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026; Interview with a female former combatant with a disability who is also an activist in Batticaloa District in February 2026.

ஏற்பட்டன. மேலும், வாழ்வாதார இழப்புகள் உள்ளிட்ட சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பாக தனிநபர் அடிப்படையிலான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாததால், பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணத் திட்டங்களிலிருந்து விலக்கப்படும் நிலை ஏற்பட்டது. இந்த இடைவெளிகளை நிரப்புவதற்காக, நிவாரணச் செயன்முறைகளில் கவனிக்கப்படாமல் விடுபட்டவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை அரச தரப்பினர் சிவில் சமூக அமைப்புகளிடம் ஒப்படைத்தனர். எனினும், அந்த அமைப்புகளின் பணிகளுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கப்பட்டதுடன், சில சந்தர்ப்பங்களில் அவற்றின் பணிகளுக்கு தடைகளும் ஏற்படுத்தப்பட்டன.

## 3. சூறாவளியால் பாதிக்கப்பட்ட பெண்களின் மும்மடங்கு சுமை

பாதிப்புறும் நிலையிலுள்ள குழுக்கள், குறிப்பாக இயலாமை அல்லது அரசியல் வன்முறை காரணமாக பல ஆண்டுகளாக, சில சந்தர்ப்பங்களில் பல தசாப்தங்களாக ஓரங்கட்டப்படுதலை அனுபவித்து வந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டமை, நிவாரண உதவிகளின் விநியோகத்தில் காணப்பட்ட ஒரு முக்கிய குறைபாடாகப் பரவலாகக் கருதப்பட்டது. இந்தக் குறைபாடு கிழக்கிலுள்ள பெண்களை — அவர்களில் மாற்றுத்திறனாளிப் பெண்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் மற்றும் வறுமையுடன் போராடும் பெண்கள் பலரும் உள்ளடங்குகின்றனர்[39] — மூன்று பிரதான வழிகளில் கடுமையாகப் பாதித்தது: பராமரிப்புப் பொறுப்புகளை ஏற்றுள்ளவர்களாக; போரினால் பாதிக்கப்பட்டவர்களாக; மற்றும் பெரும்பாலும் முறைசாரா மற்றும் நிலையற்ற தொழில்களில் ஈடுபடுபவர்களாகவும் அல்லது/அத்துடன் தமது வாழ்வாதாரத் தேவைகளுக்காக வீட்டுத் தோட்டங்கள் அல்லது சிறிய காணித் துண்டுகளில் தங்கியிருப்பவர்களாகவும் அவர்கள் பாதிக்கப்பட்டனர்.[40]

போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் பலர் பாதுகாப்பற்றதும் நிலையற்றதுமான உடலுழைப்பில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், அவர்கள் அனர்த்த நிவாரண உதவித் திட்டங்களிலிருந்து விடுபட்டு, கவனிக்கப்படாமல் போயினர். டித்வா புயல் அவர்களை மேலும் வறுமைக்குள் தள்ளியுள்ளது.[41] உதாரணமாக, பெண்களின் சிறிய அளவிலான வியாபாரங்கள் பல பதிவு செய்யப்படாதவையாக இருப்பதால், அவர்களுக்கான கொடுப்பனவுகள் அடிக்கடி மறுக்கப்பட்டன.[42] பல பெண்கள் தமது குடும்பங்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வீட்டுத் தோட்டங்களில் தங்கியிருக்கின்றனர் அல்லது/அத்துடன் சிறிய காணித் துண்டுகளில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர். எனினும், நிவாரண உதவிகளை வழங்கும்போது அரசாங்கம் பிரதானமாக பெரிய அளவிலான விவசாயிகளையே கருத்திற்கொண்டிருந்தது.[43]

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், ஒருபுறம் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிய முடியாததால் ஏற்படும் மனவேதனையும், மறுபுறம் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொருளாதாரச் சுமைகளும், பால்நிலைப்படுத்தப்பட்ட இந்தப் பாதிப்புறும் நிலையை மேலும் தீவிரப்படுத்துகின்றன. கணவர்கள், சகோதரர்கள், மகன்கள் அல்லது தந்தையர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பெண்கள், குடும்பத்தின் பிரதான வருமானம் ஈட்டுபவர்களாக திடீரெனப் பொறுப்பேற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதால், பெரும்பாலும் முறைசாரா உடலுழைப்புகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். தமது மகனுக்கு இரண்டு வயதுகூட நிரம்பாத நிலையில் கணவர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட செயற்பாட்டாளர் ஒருவர், இந்த இரட்டை வேதனைமிக்க பிரச்சினைகளை மிகவும் ஆழமாக இவ்வாறு வெளிப்படுத்தினார்: *“…30 ஆண்டுகாலப் போரிலிருந்து தப்பிப்பிழைத்து, அன்றாடத் தேவைகளைச் சமாளித்து, ஆணாதிக்கச் சமூகத்தின் சவால்களுக்கு மத்தியில் வாழ்ந்து, பாலியல் துன்புறுத்தல் அல்லது சமூகக் களங்கத்தைச் சகித்து, தனது பிள்ளைகளைப் பாதுகாத்து, வாழ்வாதாரத்திற்காக உழைத்து, சிக்கலான சட்ட முறைமைகளையும் எதிர்கொண்டு வந்த ஒரு தாய் அல்லது பெண்… இப்போது அவர்கள் களைத்துப் போயுள்ளனர்.” அவர்கள் பல ஆண்டுகளாகத் தேடியும் இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. அவர்கள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்வதுடன், அரச சேவைகளில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுமில்லை, விசேட சலுகைகள் எதுவும் கிடைப்பதுமில்லை*". வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட செயற்பாட்டின் மூலம் மனித உரிமைகள்

---

[39] In Batticaloa and Ampara Districts, the Multidimensional Vulnerability Index (MVI) lies significantly above the national MVI. UNDP, *Understanding Multidimensional Vulnerabilities: Impact on People of Sri Lanka*, District Profiles, 2023 https://www.undp.org/sites/g/files/zskgke326/files/2024-03/mvi_district_profiles_eng_final.pdf

[40] Interview with women’s activist D in Batticaloa District in January 2026.

[41] Interview with women’s activist B in Batticaloa District in January 2026; Interview with women’s activist D in Batticaloa District in January 2026; Interview with women’s activist C in Batticaloa District in February 2026; Interview with an activist and family member of a forcibly disappeared person in Batticaloa District in February 2026.

[42] Interview with women’s activist C in Batticaloa District in February 2026; Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026; Interview with women’s activist B in Batticaloa District in January 2026; Interview with leading government officer A in Batticaloa District in February 2026; Interview with a female former combatant with a disability who is also an activist in Batticaloa District in February 2026.

[43] Interview with women’s activist B in Batticaloa District in January 2026; Interview with women’s activist D in Batticaloa District in January 2026.

மீறப்படுகின்றன.[44] மேலதிகமாக, அவர்கள் ஆணாதிக்கச் சமூகத்தின் சவால்களை எதிர்கொண்டு வாழ வேண்டிய நிலையில் உள்ளனர் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறியும் சுமையைச் சுமக்கின்றனர் மற்றும் அரசைப் பொறுப்புக்கூறச் செய்வதற்கான போராட்டம் போன்ற சமூக உரிமைகள் தொடர்பான விடயங்களும், பொருளாதார உரிமைகளும் மீறப்படுகின்றன என்பதை இந்தக் கூற்று வலுவாக எடுத்துக்காட்டுகின்றது.

இந்தக் குற்றத்திற்கான பொறுப்புக்கூறலின்மைக்கு அப்பால், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களின் சமூக-பொருளாதாரப் பாதிப்புறும் நிலைகளை மேலும் தீவிரப்படுத்தும் ஏனைய பாரதூரமான முறைமைசார் தோல்விகளும் காணப்படுகின்றன. அவர்களின் இந்தச் சுமைகளை அவர்கள் டித்வா புயலின் போது மேலும் அதிகமாகச் சுமக்கும் நிலை ஏற்பட்டது. உதாரணமாக, ஆளில்லாமைச் சான்றிதழ்கள் (Certificate of Absence)[45] போதிய அளவில் கிடைக்காததால், வங்கிக் கணக்குகளை அணுகுதல், காப்புறுதிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்டுக்கொள்ளுதல் போன்றவற்றில் தடைகளை பெண்கள் எதிர்கொண்டனர்.[46] இதனால், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மிகவும் வேதனைமிக்க ஒரு நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஒன்றில் அவர்கள் அரச தரப்புகளை பொறுப்புக் கூற வைத்தல் மற்றும் தமது அன்புக்குரியவர்களை தேடுதல் என்பவற்றைக் கைவிட்டு அதிக நிதியியல் ஸ்திரத்தன்மையை வழங்கும் ஒரு மரணச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாத போது, பொருளாதாரச் சீரழிவுக்குள் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும். இந்த இரண்டு தீர்வுகளில் ஒன்றைத் தேர்வு செய்யும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.[47]

மற்றுமொரு குறிப்பாகப் பாதிப்புறும் நிலையிலுள்ள குழுவாக இயலாமை கொண்ட பெண்கள் காணப்பட்டனர். அவர்களின் நிவாரணத்துக்கான அணுகலைத் தடுக்கும் தற்போது காணப்படும் கட்டமைப்புகள் காரணமாக உரிய அளவில் வெளித் தெரியாத ஒரு குழுவாக அவர்கள் உள்ளனர்.[48] உதாரணமாக, விசேடமாக முன்னாள் போராளிகள் தம்மைப் பதிவு செய்துகொள்வதற்குத் தேவையான மருத்துவப் பதிவுகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சவால்களை இந்நிலை ஏற்படுத்துகின்றது.[49] டித்வா அனர்த்தத்தின் போது மேலும் தீவிரமாக வெளிப்பட்ட தமது அன்றாட ஓரங்கட்டப்படுதல் தொடர்பான அனுபவங்களையும் இயலாமை கொண்ட பெண்கள் பகிர்ந்துகொண்டனர். உதாரணமாக, கணவர்கள் பராமரிப்புக் கொடுப்பனவைச் செலுத்தாமையால் ஏற்பட்ட பொருளாதாரச் சிரமங்களுடன், தொழில் மற்றும் வாழ்வாதார இழப்புகளுக்கான நிவாரண உதவிகள் கிடைக்காமையும் இணைந்து அவர்களை மேலும் பாதித்தது. அத்துடன், அரச சேவைகளை அணுகுவதிலும் அவர்கள் உடல்ரீதியான தடைகளையும் சவால்களையும் எதிர்கொண்டனர்.[50]

பெண்களின் ஊதியமற்ற பராமரிப்புப் பணிகளும், குடும்பப் பொறுப்புகளைச் சுமக்க வேண்டிய நிலையும், அனர்த்தங்களின் போது அவர்களின் பாதிப்புறும் நிலைக்கு மேலும் ஒரு பரிமாணத்தைச் சேர்க்கின்றன. கிழக்கில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதால், இந்தப் பாதிப்புறும் நிலை மேலும் தீவிரமடைகின்றது.[51]

---

44 Interview with an activist and family member of a forcibly disappeared person in Batticaloa District in February 2026.

45 The Certificate of Absence was introduced in 2016 after many years of lobbying by family members of the disappeared and human rights groups. Stopped by the Gotabaya Rajapaksa government and then resumed under the NPP government. In its current form, it has several shortcomings. Faizer Shaheid. 2025. *Certificate of Absence: OMP's certificate not accepted by banks*? The Morning, 26th January 2025 https://www.themorning.lk/articles/2k9HNPitbz4FJpRkVt60

46 Interview with an activist and family member of a forcibly disappeared person in Batticaloa District in February 2026.

47 Interview with an activist and family member of a forcibly disappeared person in Batticaloa District in February 2026.

48 Sarala Emmanuel, Ponni Arasu, and Vijayaletchumi Sekar, *Collective Organizing Among Women Living with Disabilities (WLD) to Address and Ensure Their Right to Health in Eastern Sri Lanka*, in Handbook on Sex, Gender and Health: Perspectives from South Asia (edited by TK Sundari Ravindran et al.), Springer Singapore, 2025.

49 Interview with a female former combatant with a disability in Batticaloa District in January 2026.

50 Interview with woman B with a disability who is also an activist in Batticaloa District in February 2026; Interview with a female former combatant with a disability who is also an activist in Batticaloa District in February 2026; Interview with a female former combatant with a disability in Batticaloa District in January 2026.

51 27,1 % of households in the Eastern Province are headed by women, with Batticaloa District having the highest percentage (32,3 %) island-wide. Department of Census and Statistics, *Household, Income and Expenditure Survey*, 2019 https://www.statistics.gov.lk/Resource/en/GenderStatistics/Special_Concerns/FemaleHeadedHouseholdsBySector,ProvinceAndDistrict2016.pdf.

அனர்த்தத்தின் போது தமது பிள்ளைகளின் கல்வி குறித்த கவலைகளையும், குடும்பத்தினருக்கு உணவு வழங்குவதில் எதிர்கொண்ட சிரமங்களையும் பல பெண்கள் பகிர்ந்துகொண்டனர்.[52]

ஒட்டுமொத்த குடும்பத்தினதும் பொறுப்பைச் சுமப்பதற்காக பெண்கள் பாதுகாப்பற்ற மற்றும் முறைசாராப் பணிகளில் ஈடுபடும் நிலை காணப்படுகின்றது. இந்நிலையுடன் இணைந்து, அவர்கள் இயலாமை கொண்டவர்களாக இருப்பதால் அல்லது காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களைத் தேடுவதால் வளங்களைச் செலவிடும் நிலை எழும் போது அவர்கள் கடன்களைப் பெறும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.[53] அனர்த்தம் மிகத் தீவிரமாக இருந்த காலப்பகுதியில்கூட, கடன் வசூலிப்பவர்கள் பெண்கள் மீது அழுத்தம் கொடுத்ததாகப் பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.[54] முகாம்களுக்கு வெளியே வாழ்ந்த மக்களுக்கு உலர் உணவுகள் மற்றும் சமைத்த உணவுகளை வழங்கும் நடைமுறை பண வடிவில் அமைந்த நிவாரண உதவிகளை வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடும் நடைமுறையாக மாற்றப்பட்டதையும் கடன்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த பெண் செயற்பாட்டாளர்கள் விமர்சனம் செய்தனர்.[55]

இந்த அனைத்து உதாரணங்களிலும், டித்வா புயலின் போது அதிகரித்த பாதிப்புக்குள்ளாகும் நிலை என்பது, அரசின் புறக்கணிப்பு பெண்களின் மனித, சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் மீறப்படல் என்பவற்றின் நீண்டகால ஒட்டுமொத்த விளைவாகும். குறிப்பாக, இயலாமை கொண்ட பெண்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களும் இதனால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய குழுக்கள் கவனத்திற்கொள்ளப்படாததும், அதனுடன் அனர்த்த நிவாரண நடவடிக்கைகளின்போது பாதிப்புக்குள்ளாகும் நிலையின் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த பரிமாணங்கள் கவனத்திற்கொள்ளப்படாததும், ஏற்கனவே மிகவும் மோசமாக இருந்த அவர்களது வாழ்க்கை நிலைமைகளை மேலும் மோசமாக்கின. தாமும் தமது குடும்பமும் உயிர்வாழ்வதற்காகப் போராடுதல், ஆணாதிக்கக் கட்டமைப்புகளுக்கு மத்தியில் தமது வாழ்வை முன்னெடுத்துச் செல்ல வேண்டியிருத்தல் மற்றும் தமக்கும் ஏனையோருக்கும் நீதிக்காகப் போராடுதல் ஆகிய மும்மடங்குச் சுமைகளைத் தாங்கியதன் விளைவாக ஏற்பட்டுள்ள சோர்வையும் பல பெண்கள் தமது கதைகளில் வெளிப்படுத்தினர். எனினும், அனர்த்த முகாமைத்துவத்தில் எவ்வித பால்நிலை உணர்திறனும் காணப்படவில்லை.[56]

## 4. அரசியல் மயமாக்கப்பட்ட உதவி மற்றும் அரசாங்கத்தின் மீதான அவநம்பிக்கை

சார்பு நிலை, இனரீதியான பக்கச்சார்பு மற்றும் பாரபட்சம் என்பவற்றின் அடிப்படையில் நிவாரண விநியோகங்கள் தடுக்கப்பட்டன, மறுக்கப்பட்டன மற்றும் நியாயமற்ற முறையில் விநியோகிக்கப்பட்டதால் அது அரசியல் மயப்படுத்தப்பட்டது என பரவலாக நோக்கப்பட்டது. குறிப்பாக, இன ரீதியான முனைவாக்கங்கள் நிலவிய பகுதிகளிலும், உள்ளூர் ஆட்சி மற்றும் நிர்வாகம் தொடர்பாக நீண்டகாலமாக முரண்பாடுகள் நிலவி வந்த பகுதிகளிலும் இந்நிலை குறிப்பாகக் காணப்பட்டது. NPP அரசாங்கத்தின் அண்மைய முன்னெடுப்பான ‘பிரஜா சக்தி’ தொடர்பில்; அதன் உறுப்பினர்கள் ஜனநாயகமற்ற முறையில் தெரிவுசெய்யப்படுவது, இம்முன்னெடுப்பு கட்சி அரசியல் சார்ந்ததாக அமைந்திருப்பது மற்றும் அரச உத்தியோகத்தர்கள் புறக்கணிக்கப்படுவது குறித்து மக்கள் கருத்துத் தெரிவித்தனர். குறிப்பாக, முன்னாள் போராளிகள் போன்ற பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்கள் எதிர்கொண்ட துன்புறுத்தல் மற்றும் அரசியல் ரீதியான பழிவாங்கல் அனுபவங்களின் விளைவாக, பொதுவாக அரசின் மீதும், குறிப்பாக உள்ளூர் நிர்வாகத்தின் மீதும் தெளிவாகக் காணக்கூடிய அவநம்பிக்கை, சந்தேகம் மற்றும் அச்சம் நிலவியது.

கிழக்கில் இன ரீதியான முனைவாக்கம் காணப்படும் பல்லினச் சூழல்களில் தீர்க்கப்படாமல் நீடிக்கும் நிர்வாக முரண்பாடுகள், நிவாரண விநியோகத்திற்கு ஏற்பட்ட முக்கிய தடையாக அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டது. திருகோணமலையின் சம்பூர் மற்றும் கல்முனை ஆகிய பகுதிகளில், தமிழ் பிரதேசங்கள் திட்டமிட்ட முறையில் ஓரங்கட்டப்படுவதும், அதன் விளைவாக ஆழமாக வேரூன்றிய நிர்வாகப் பிரச்சினைகள் உருவாகியிருப்பதும், போதியளவில் செயல்திறனற்ற அனர்த்த முகாமைத்துவத்திற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக இருப்பதாக கலந்துரையாடலில் பங்கேற்றவர்கள் குறிப்பிட்டனர். கல்முனையில், கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக நீண்டகாலமாக நிலவி வரும் முரண்பாடு,[57] நிவாரண விநியோகத்தை கடுமையாகப்

---

[52] FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities, war-affected women and activists in April 2026; Interview with woman A with a disability who is also an activist in Batticaloa District in February 2026; Interview with women’s activist C in Batticaloa District in February 2026; Interview with woman B with a disability who is also an activist in Batticaloa District in February 2026.

[53] Interview with women’s activist D in Batticaloa District in January 2026.
Such accumulated household debt is among the highest in the Eastern Province with predatory micro-finance companies especially targeting female-headed households in former war zones:
UNDP, *Addressing Household Debt Induced Vulnerability in Sri Lanka*, September 2024
https://www.undp.org/sites/g/files/zskgke326/files/2024-11/household_debt_brief.pdf; Nathan Legrand, *In Sri Lanka, Resistance to Private Indebtedness is a Strategic Issue*, CADTM, 3rd March 2020
https://www.cadtm.org/In-Sri-Lanka-Resistance-to-Private-Indebtedness-Is-a-Strategic-Issue.

[54] Interview with women’s activist D in Batticaloa District in January 2026; Interview with women’s activist C in Batticaloa District in February 2026.

[55] Interview with women’s activist C in Batticaloa District in February 2026.

[56] Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026.

[57] Wasantha Chandrapala and S. Rubatheesan, *Give Kalmunai North Division its Due Status, Protesters*

பாதித்துள்ளது.[58] அதேபோன்று, சம்பூர் மற்றும் திருகோணமலையில், இன அடிப்படையிலான பாகுபாடு நிலவுவதாக மக்கள் விபரித்தனர். உதவி பெறுவதற்கான நபர்களின் பட்டியல்களில் பெரும்பாலும் முஸ்லிம் நபர்களின் பெயர்கள் இடம்பெறும் வகையில் அவை தயாரிக்கப்படுவது முதல், பாதிப்புக்குள்ளான தமிழ் பகுதிகள் "பாதிக்கப்படாத பகுதிகள்" என அறிவிக்கப்படுவது வரையிலான பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் இதற்கான உதாரணங்களாகச் சுட்டிக்காட்டினர்.[59] மனிதாபிமான உதவிகளை வழங்க விரும்பிய அமைப்புகளுக்குக்கூட அவ்வுதவிகளை வழங்குவதற்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்டன.[60] பல இடங்களில், இயலாமை கொண்ட மக்களின் நிறுவங்கள் செயற்படாமல் இருப்பதற்கு, நிர்வாகத்தில் நிலவும் இனப் பாரபட்சமே காரணம் எனக் கூறப்பட்டது.[61]

தமிழ் கிராம அலுவலர் (GN) பிரிவுகளில் சாதி அடிப்படையிலான பாரபட்சம் நிலவுவதையும் செயற்பாட்டாளர்கள் அவதானித்தனர்.[62] நிவாரண விநியோகம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதில் உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள் கொண்டுள்ள அளவுக்கதிகமான அதிகாரம், இன மற்றும் சாதி அடிப்படையிலான ஓரங்கட்டப்படுதலை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நிலைமை மேம்பட்டுள்ளதாக ஆய்வில் பங்கேற்ற பலர் எம்மிடம் தெரிவித்த போதிலும், பல முன்னாள் போராளிகள் இன்னமும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் (CID) "சென்று பார்க்கப்படுவதுடன்", கண்காணிப்புக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.[63] எனவே, தமது உரிமைகளைக் கோருவதாயினும் அல்லது நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதாயினும், அரசுடன் தொடர்புகொள்வது குறித்து பெரும்பாலான முன்னாள் போராளிகள் ஆழமாக வேரூன்றிய அச்சத்தையும் சந்தேகத்தையும் வெளிப்படுத்தினர்.[64] பெண் முன்னாள் போராளிகளைப் பொறுத்தவரையில், இந்தப் பாதிப்புறும் நிலை மேலும் தீவிரமடைந்து காணப்படுகின்றது.[65] காணி முரண்பாடுகள் தொடர்பான போராட்டங்களில் ஈடுபட்டதன் காரணமாக, இழப்பீடு வழங்கப்படுவது தொடர்பில் குறிப்பாக இலக்கு வைக்கப்பட்டுப் பாரபட்சத்திற்கு உள்ளான முன்னாள் போராளிகள் குறித்தும் எமக்குத் தெரிவிக்கப்பட்டது.[66]

---

*Demand*, Sunday Times, 31st March 2024 https://www.sundaytimes.lk/240331/news/give-kalmunai-north-division-its-due-status-protesters-demand-553546.html; Tamil Guardian, *Tamils in Kalmunai protest against move to subjugate local division*, 26th March 2026 https://www.tamilguardian.com/content/tamils-kalmunai-protest-against-move-subjugate-local-division; Tamil Guardian*, Tamils in Kalmunai continue protest calling for funds for development*, 3rd April 2024 https://www.tamilguardian.com/content/tamils-kalmunai-continue-protest-calling-funds-development.

[58] FGD with DS officers in Kalmunai in February 2026.

[59] FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities, war-affected women and activists in April 2026; Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026.

[60] FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities, war-affected women and activists in April 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026.

[61] FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities, war-affected women and activists in April 2026; Interview with war-affected woman A in Amparai District in February 2026; Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026.

[62] Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026.

[63] FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities, war-affected women and activists in April 2026; Interview with a female former combatant with a disability in Batticaloa District in January 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026.

[64] FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026.

[65] FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities, war-affected women and activists in April 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026.

[66] Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities, war-affected women and activists in April 2026; Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026.

நிவாரணம் பெறுவதற்கான பயனாளிகளைத் தெரிவுசெய்வதில் காணப்பட்ட தமக்கு வேண்டியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் போக்கும் ஊழலும் அடிக்கடி முன்வைக்கப்பட்ட மற்றுமொரு பிரச்சினையாக அமைந்துள்ளது.[67] நிவாரணத்திற்கான பதிவுசெய்தல் மற்றும் நிவாரணம் வழங்குதல் தொடர்பில் காணப்பட்ட வெளிப்படைத்தன்மையின்மையும், கிராம சேவகர்களால் (GS) மேற்கொள்ளப்பட்ட தன்னிச்சையான மதிப்பீடுகளும் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தன.[68]

‘பிரஜா சக்தி’ அரசின் மீதான அவநம்பிக்கையை மேலும் அதிகரித்தது. ‘பிரஜா சக்தி’ என்பது வெளிப்படைத்தன்மையற்ற கட்டமைப்புகளைக் கொண்ட, மிகவும் அரசியல்மயப்படுத்தப்பட்ட ஒரு முன்னெடுப்பு என்பதில் எமது ஆய்வில் பொதுவான கருத்தொற்றுமை காணப்பட்டது.[69] உதாரணமாக, மூன்று மாவட்டங்களிலும் ஆய்வில் பங்கேற்றவர்கள், ‘தேசிய மக்கள் சக்தியைச் (NPP) சேர்ந்தவர்களுக்கு’ முன்னுரிமை அளிக்கப்பட்ட நிலையில், தலைவர்களும் உறுப்பினர்களும் ஜனநாயகமற்ற நடைமுறைகளின் ஊடாகத் தெரிவுசெய்யப்பட்டதாகக் குறிப்பிட்டனர்.[70] ‘பிரஜா சக்தி’ உள்ளூர் செயற்பாட்டாளர்களையும் இளைஞர் சம்மேளனங்களையும் தன்னுடன் இணைத்துக்கொள்வதுடன், அரச உத்தியோகத்தர்களைப் புறக்கணித்துச் செயற்படுவதாகவும் கருதப்பட்டது.[71] ‘பிரஜா சக்தி’ உறுப்பினர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபாடு கொண்டிருந்த சம்பவங்கள் குறித்தும் மக்கள் தெரிவித்தனர். மேலும், சில இடங்களில் ஊழல் இடம்பெற்றதாக வதந்திகளும் நிலவின.[72]

நிர்வாகப் பக்கச்சார்பு மற்றும் இனப் பாரபட்சம் மிக்க இத்தகைய சம்பவங்கள் நிவாரண உதவிகளை வழங்குவதற்குத் தடையாக அமைந்ததுடன், உதவிகள் நியாயமற்ற முறையில் விநியோகிக்கப்படுவதற்கும் வழிவகுத்துள்ளன. அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பரந்தளவிலான தீர்மானமெடுக்கும் அதிகாரம் மற்றும் முறைமைசார் தோல்விகளுக்கான பொறுப்புக்கூறல் இன்மை ஆகியவற்றின் காரணமாக நடைமுறையில் வெளிப்படக்கூடியதாக இன ரீதியான முனைவாக்கம் மிக்க சூழமைவுகளில் காணப்பட்ட நிர்வாகப் பக்கச்சார்பின் காரணமாக உதவி விநியோகம் அரசியல்மயப்படுத்தப்பட்டிருந்தது. வெளிப்படைத்தன்மையின்மை, வேண்டியவர்களுக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் ஊழல் ஆகியவை பல்வேறு பகுதிகளில் போராட்டங்களுக்கு வழிவகுத்தன. மேலும், நிவாரண விநியோகம் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கான கட்டமைப்புகள் அரசியல்மயப்படுத்தப்படுவதற்கு ‘பிரஜா சக்தி’ பங்களிப்பதாக பரவலாகக் கருதப்பட்டது.

## 5. ஒன்றுகூட்டப்படும் துன்பங்கள்

*"கடன்களை எடுத்தே நாங்கள் சாப்பிட வேண்டியிருந்தது."*[73]
---போரினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்---

*"சூறாவளிக்குப் பின்னர், என்னால் எதுவுமே செய்ய முடியாத ஒரு நிலைக்கு நான் தள்ளப்பட்டுள்ளேன்."*.[74]
---போரினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்---

---

[67] FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026; Interview with women’s activist B in Batticaloa District in January 2026; Interview with women’s activist A in Batticaloa District in January 2026.

[68] Interview with woman B with a disability who is also an activist in Batticaloa District in February 2026; Interview with women’s activist B in Batticaloa District in January 2026; Interview with women’s activist D in Batticaloa District in January 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities, war-affected women and activists in April 2026.

[69] See also Centre for Policy Alternatives (CPA), *Statement on Praja Shakthi, Clean Sri Lanka, and the Constitutional Integrity of the Sri Lankan State*, 2nd May 2026 https://www.cpalanka.org/statement-by-the-centre-for-policy-alternatives-on-praja-shakthi-clean-sri-lanka-and-the-constitutional-integrity-of-the-sri-lankan-state/.

[70] Interview with woman B with a disability who is also an activist in Batticaloa District in February 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities, war-affected women and activists in April 2026; Interview with war-affected woman A in Amparai District in February 2026; FGD with DS officers in Kalmunai in February 2026; Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026; Interview with women’s activist C in Batticaloa District in February 2026.

[71] Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026; Interview with woman B with a disability who is also an activist in Batticaloa District in February 2026; Interview with women’s activist B in Batticaloa District in January 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities, war-affected women and activists in April 2026.

[72] Interview with GS B in Batticaloa District in February 2026; Interview with women’s activist B in Batticaloa District in January 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities, war-affected women and activists in April 2026.

[73] Interview with war-affected woman B in Amparai District in February 2026.

[74] Interview with war-affected woman C in Amparai District in February 2026.

கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து நாம் கேட்டறிந்த கதைகள், பல தசாப்தங்களாக அவர்களது வாழ்வில் குவிந்துள்ள துன்பங்களையும் மனவதிர்ச்சியையும் வெளிப்படுத்துவதுடன், அவை டித்வாஅ புயல் அனர்த்தத்தின்போது அவர்களின் பாதிப்புறும் நிலையை மேலும் தீவிரப்படுத்தியதையும் வெளிக்கொணர்கின்றன. அவை, உயிர்வாழ்வதற்காகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் போராட்டங்களால் ஏற்படும் உணர்வு ரீதியான பாதிப்புகளையும் சோர்வையும் வெளிப்படுத்துகின்றன. அனர்த்தங்களுடன் தொடர்புடைய சமூக, பொருளாதார மற்றும் மனித உரிமை மீறல்களை மட்டுமன்றி, கடந்த காலங்களில் இடம்பெற்ற அத்தகைய உரிமை மீறல்களையும் நிவர்த்தி செய்வதற்கு, சமூக நீதியை அனர்த்த முகாமைத்துவத்துடன் இணைக்க வேண்டிய அவசரத் தேவை இக்கதைகளிலிருந்து மிகத் தெளிவாக வெளிப்படுகிறது.

பல சந்தர்ப்பங்களில், மக்கள் அனுபவிக்க நேர்ந்த நிர்க்கதி நிலை, போரின்போதும் போருக்குப் பின்னரும் அவர்கள் அனுபவித்த அநீதிகளின் விளைவாக உருவானதுடன், அந்த அநீதிகளின் தாக்கங்கள் புயலின்போது மேலும் வெளிப்பட்டன. தமது அன்புக்குரியவர்கள் கொல்லப்பட்ட அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் உள்ளவர்கள், தமது இழப்புகள் தொடர்பில் இதுவரை பொறுப்புக்கூறலையோ இழப்பீட்டையோ பெற்றுக்கொள்ளவில்லை. மேலும், அரசியல் வன்முறைகள் அவர்களைப் பெரும்பாலும் கடுமையான வறுமைக்குள் தள்ளியுள்ளன. கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பலர் ஒருமுறை மாத்திரமன்றி, பல தடவைகள் இடம்பெயர நேரிட்டதால், அவர்கள் போதிய வசதிகளற்ற வீடுகளில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவை அனைத்தும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களை டித்வா புயலின் தாக்கங்களால் மேலும் பாதிப்புறக்கூடியவர்களாக மாற்றியுள்ளன.

போர்க்காலம் முழுவதிலும், அதற்குப் பின்னரான காலப்பகுதியிலும், பல சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக மாத்திரம் வழங்கப்பட்ட சமுர்த்தி அல்லது அஸ்வெசும உதவிகளைத் தவிர, அரசின் வேறு எந்த ஆதரவும் இன்றி தாங்கள் கைவிடப்பட்ட நிலையில் இருந்ததாக மக்கள் தெரிவித்தனர். வீட்டுத்திட்டங்களில் உள்வாங்கப்படுவதற்காகவோ அல்லது நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவோ அரச உத்தியோகத்தர்கள் இலஞ்சம் கோரியதையும், ஆனால் அதனைச் செலுத்துவதற்கான வசதி தமக்கு இல்லாதிருந்ததையும் மனதை உலுக்கும் விதத்தில் மக்கள் விபரித்தனர். அரசியல் வன்முறைகளை அனுபவித்தவர்கள், பாதுகாப்புப் படையினர் மீது மட்டுமன்றி, பரந்த அளவில் அரசின் மீதும் தமக்கு ஆழமான அச்சம் நிலவுவதாகத் தெரிவித்தனர்.

உதாரணமாக, LTTE அமைப்பின் போராளிகளின் குடும்ப உறுப்பினர்கள், தாங்கள் ஒதுக்கப்பட்டமை மற்றும் அரசினால் கைவிடப்பட்டமை குறித்து எம்மிடம் தெரிவித்தனர். இராணுவத்தாலும் CID இனாலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தொந்தரவுகள், போர்க்காலத்தில் சிலரைப் பல தடவைகள் இடம்பெயர்ந்து தப்பிச் செல்ல நிர்ப்பந்தித்தன. அத்துடன், அரசினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட துன்புறுத்தல்கள், அவர்களுக்கிருந்த சமூக ஆதரவு வலையமைப்புகளையும் பெரும்பாலும் இல்லாமல் செய்தன. இதனால், டித்வா புயலின்போது அவர்கள் மேலும் பாதிப்புறக்கூடியவர்களாக மாறியதுடன், நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான அவர்களது வாய்ப்புகளும் தடைபட்டன.

போரினால் பாதிக்கப்பட்ட பலர், தாங்கள் அனுபவித்த, பெரும்பாலும் ஒன்றுக்கு மேற்பட்ட மனவதிர்ச்சிகளின் நினைவுகளால் இன்றும் வேதனைக்குள்ளாகி வருகின்றனர்.. தமது அன்புக்குரியவர்கள் காயமடைந்தமை, கொல்லப்பட்டமை அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, இடம்பெயர நேரிட்டமை அல்லது பொதுமக்களுக்கு எதிரான படுகொலைகளிலிருந்து உயிர்தப்பியமை போன்ற மனவதிர்ச்சியூட்டும் வேதனையான அனுபவங்கள், மக்களை கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளும் தள்ளியுள்ளன. தப்பிப்பிழைத்தவர்கள் பெரும்பாலும் கீரை வகைகள் பறித்தல், வீட்டிலிருந்து உணவுப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் ஏனைய கடினமான சிறிய அளவிலான வாழ்வாதார நடவடிக்கைகளின் மூலமே தமது வாழ்க்கையை நடத்த வேண்டியிருந்தது. டித்வா புயலின் போது இத்தகைய வாழ்வாதார நடவடிக்கைகளில் அவர்களால் ஈடுபட முடியவில்லை.போரினால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் வீட்டுத் தோட்டங்களையும் தமது வாழ்வாதாரத்துக்காக நம்பியிருந்தன. அனர்த்தத்தைத் தொடர்ந்து அவ்வீட்டுத் தோட்டங்கள் அழிவடைந்ததுதன் அல்லது/அத்துடன், அவர்கள் வளர்த்து வந்த கோழிகளும் உயிரிழந்தன. இத்தகைய இழப்புகள் அவர்களது பொருளாதார சிரமங்களை மேலும் அதிகரித்தன. இத்தகைய குடும்பங்கள் பெரும்பாலும் நாளாந்தக் கூலி வேலைகளையும் நம்பியிருந்த நிலையில், டித்வா புயல் காரணமாக அவ்வேலைகளும் தடைபட்டன.

இவ்வாறான நிலையை எதிர்கொண்ட பலருக்கு எந்தவித நிவாரணமும் கிடைக்கவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது மேற்கோள் எடுத்துக்காட்டுவது போன்று, போதிய அளவில் இல்லாத நிவாரண விநியோகமும், கடந்தகால வன்முறைகள் மற்றும் அவற்றின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார சிரமங்களை நிவர்த்தி செய்வதில் காணப்பட்ட முறைமைசார் தோல்விகளும் இணைந்து, போரின்போது வன்முறைகளை அனுபவித்தவர்களை டித்வா புயலுக்குப் பின்னர் பட்டினிக்கு உள்ளாகக்கூடிய நிலைக்குத் தள்ளியதுடன், சிலரை உணவுத் தேவைக்காகக் கடன் பெற வேண்டிய நிலைக்கும் நிர்ப்பந்தித்தன.

இரண்டாவது மேற்கோள் எடுத்துக்காட்டுவது போன்று, உயிர்வாழ்வதற்கான இடைவிடாத போராட்டங்கள் மற்றும் போதிய ஆதரவின்மை காரணமாக ஏற்பட்ட விரக்தியும் நம்பிக்கையின்மையும் பலரது அனுபவப் பகிர்வுகளில் வெளிப்பட்டன. கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள், தமது பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வது குறித்த கவலைகளையும், அடுத்த தலைமுறைக்கும் பரவியுள்ள நிர்க்கதி நிலையையும் மனதை உருக்கும் விதத்தில் பகிர்ந்துகொண்டனர்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலநிலை, புயலுக்குப் பின்னரும் அவர்களைத் தொடர்ந்து பாதித்த பின்வரும் பல்வேறு அநீதிகளையும் முறைமைசார் தோல்விகளையும் சுட்டிக்காட்டுகிறது: அவர்களை மிகவும் பாதிப்புறக்கூடிய நிலைக்குத் தள்ளிய, காலப்போக்கில் குவிந்த மனவதிர்ச்சிகளும் பொருளாதார சிரமங்களும்; அவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறல் இல்லாமை; நிவாரண விநியோகத்திலும் நலன்புரித் திட்டங்களுக்கான பதிவிலும் காணப்பட்ட ஊழல்; போராளிகளின் குடும்பங்கள் மீதான துன்புறுத்தல்கள்; மற்றும் பொதுவாக அரசு அவர்கள் மீது காண்பிக்கும் புறக்கணிப்பு என்பனவாகும். எம்முடன் பகிரப்பட்ட அனுபவங்கள், தப்பிப்பிழைத்தவர்கள் தாம் எதிர்கொண்ட பல்வேறு மனவதிர்ச்சிகளுக்கு மேலதிகமாக, பெரும்பாலும் மிக மோசமான பொருளாதார நிலைகளுக்கும் தள்ளப்பட்டிருந்ததை மனதை உலுக்கும் விதத்தில் எடுத்துரைக்கின்றன. எனவே, போரினால் பாதிக்கப்பட்ட மக்களை இலக்காகக் கொண்ட நிவாரணத்

திட்டங்களை உள்ளடக்கிய, சமூக நீதியை மையமாகக் கொண்ட அணுகுமுறையை அனர்த்த முகாமைத்துவத்தில் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை இவை எடுத்துக்காட்டுகின்றன.

## 6. பார்க்கப்படாமலும் குரல் செவிசாய்க்கப்படாமலும் இருத்தல்

அரசினால் தாங்கள் கவனிக்கப்படவோ தமது குரல்கள் செவிமடுக்கப்படவோ இல்லை என்பதை எடுத்துரைத்த பல மனதை உருக்கும் அனுபவப் பகிர்வுகளில் அனர்த்த முகாமைத்துவத்தில் காணப்பட்ட முறைமைசார் தோல்விகளும், பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்கள் ஓரங்கட்டப்பட்டமையும் வெளிப்பட்டன. இழப்புகளை நேரில் வந்து பார்வையிடாத கிராம அலுவலர்களாலும் (GS), அரச உத்தியோகத்தர்களின் உணர்வுபூர்வமற்ற அணுகுமுறையாலும் அத்துடன் பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்கள் தொடர்பான தரவுகள் இல்லாமையாலும் மக்கள் கவனிக்கப்படாதவர்களாக ஆக்கப்பட்டனர். இது நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்வதில் தடைகளை ஏற்படுத்தியதுடன், பதிவுசெய்யும் செயன்முறையில் காணப்பட்ட இடையூறுகள் அத்தடைகளை மேலும் தீவிரப்படுத்தின. அடிமட்டச் செயற்பாட்டாளர்களும் அமைப்புகளும் அனர்த்த முகாமைத்துவக் கூட்டங்கள் மற்றும் தீர்மானமெடுக்கும் செயன்முறைகளிலிருந்து விலக்கப்பட்டதன் மூலம், பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்களின் குரல்களும் செவிமடுக்கப்படாத நிலைக்குத் தள்ளப்பட்டன.

பிரதேச செயலக (DS) பணியாளர்களிடமோ அல்லது கிராம சேவகர்களிடமோ (GS) “வந்து பாருங்கள்” எனத் தாங்கள் மிகுந்த நிர்க்கதியுடன் வேண்டுகோள் விடுத்த விதம் குறித்த மனதை உருக்கும் அனுபவங்களை மக்கள் பகிர்ந்துகொண்டனர். எனினும், “யாரும் வந்து பார்க்கவில்லை” என்பதே பலரும் அடிக்கடி எதிர்கொண்ட அனுபவமாக இருந்தது.[75] நிவாரணத்திற்காகப் பதிவுசெய்துகொள்வதற்கு மக்கள் நிர்க்கதியுடன் மேற்கொண்ட, பெரும்பாலும் பயனற்றுப்போன முயற்சிகளிலும் அவர்கள் புறக்கணிக்கப்பட்ட நிலை வெளிப்பட்டது.[76] பதிவுசெய்துகொள்வதற்காக அரச உத்தியோகத்தர்களை அணுகியபோது மக்களுக்கு பொதுவாகச் சொல்லப்பட்ட பதில்கள் பின்வருமாறு: *"தாங்கள் பதிவுசெய்யும் பணியை முடித்துவிட்டோம்"* அல்லது “*பதிவுக்கான கால அவகாசம் முடிந்துவிட்டது.*"[77] மேலும், உங்களுக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்காது என பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்களிடம் நேரடியாகவே தெரிவிக்கப்பட்டது.[78] பொதுவாக, நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பைப் பெறுவதற்காக, படிவங்களை நிரப்புதல், குறிப்பிட்ட கிராம சேவகரை (GS) அணுகுதல், கடிதங்களை எழுதுதல், தமது தேவைகளை ஒரு குழுவின் ஊடாக முன்வைத்தல் போன்றவற்றுக்கு பலர் ஏனையவர்களின் உதவியை நம்பியிருக்க வேண்டியிருந்தது.[79] நிவாரணப் பட்டியல்களில் மக்களின் பெயர்களைச் சேர்ப்பதற்காக அரச உத்தியோகத்தர்களால் இலஞ்சம் கோரப்பட்டமை தொடர்பிலும் மக்கள் பேசினர்.[80]

மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்ட மற்றுமொரு விடயம், அரச உத்தியோகத்தர்கள் வெளிப்படுத்திய உணர்வுபூர்வமற்ற தன்மையும், சில சந்தர்ப்பங்களில் ஆக்ரோஷமானதாகவும் இருந்த முரட்டுத்தனமான அணுகுமுறையும் ஆகும். இது மக்களை அவமானத்திற்கும் அச்சத்திற்கும் உள்ளாக்கியதுடன், இறுதியில் அவர்கள் விரக்தியடைந்து முயற்சிகளைக் கைவிடும் நிலைக்கும் இட்டுச் சென்றது.[81] கிராம சேவகர்கள் (GS) அதிகாரத்தனமாகச் செயற்பட்டு, நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்வதைத் தடுப்பதற்காகத் தமது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திய அனுபவங்கள் பொதுவாகக் காணப்பட்டன.[82] குறிப்பாக,

---

[75] FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities, war-affected women and activists in April 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026; Interview with woman B with a disability who is also an activist in Batticaloa District in February 2026; Interview with women’s activist B in Batticaloa District in January 2026; Interview with a female former combatant with a disability who is also an activist in Batticaloa District in February 2026.

[76] Interview with women’s activist A in Batticaloa District in January 2026.

[77] Interview with women’s activist A in Batticaloa District in January 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026.

[78] FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026; Interview with women’s activist B in Batticaloa District in January 2026.

[79] Interview with women’s activist A in Batticaloa District in January 2026.

[80] Interview with women’s activist B in Batticaloa District in January 2026.

[81] Interview with war-affected woman D in Amparai District in February 2026; FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026; Interview with a female former combatant with a disability in Batticaloa District in January 2026.

[82] Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026; Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026.

முன்னாள் போராளிகள் பாரபட்சத்திற்கு உள்ளாக்கப்பட்டதுடன், உதவி விநியோகத்தின்போது வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டனர்.[83]

மேலும், அரச உத்தியோகத்தர்கள் ஆதாரமாகப் புகைப்படங்கள் அல்லது காணொளிகளைக்கூட கோரியதால், ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய சுமை பாதிக்கப்பட்ட மக்கள் மீது அளவுக்கதிகமாக சுமத்தப்பட்டது.[84] எனினும், மக்கள் புகைப்படங்கள் அல்லது காணொளிகளைச் சமர்ப்பித்திருந்தாலும்கூட, அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்பதற்கு அது எந்த வகையிலும் உத்தரவாதமாக அமையவில்லை.[85]

தகவல் மற்றும் தொடர்பாடலில் காணப்பட்ட பாரிய இடைவெளிகள், பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்கள் நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்வதை மேலும் தடைசெய்தன.[86] பல சந்தர்ப்பங்களில், முக்கியமான தகவல்கள் WhatsApp குழுக்களின் ஊடாக மாத்திரமே பகிரப்பட்டன.[87] பெரும்பாலான சுற்றுநிருபங்கள் ஆங்கில மொழியில் மாத்திரமே வெளியிடப்பட்டதாக மட்டக்களப்பிலுள்ள செயற்பாட்டாளர்கள் விமர்சித்தனர்.[88]

பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்கள் தொடர்பான தரவுகளைச் சேகரித்துப் புதுப்பிக்க அரசு தவறியமை,[89] அனர்த்த முகாமைத்துவத்தில் அவர்கள் கட்டமைப்பு ரீதியாகக் கவனிக்கப்படாத நிலையை மேலும் தீவிரப்படுத்தியது. இதன் விளைவாக, உணவுக்கான அணுகல் உள்ளிட்ட அடிப்படை நிவாரண உதவிகள்கூட அவர்களுக்குக் கிடைக்காத நிலை ஏற்பட்டது.[90]

அனர்த்த முகாமைத்துவத்தில் பாதிப்புறும் நிலையில் உள்ள மக்களின் குரல்களும் செவிமடுக்கப்படாத நிலைக்குத் தள்ளப்பட்டன. உதாரணமாக, பெண்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிப்புறும் நிலையில் உள்ள சமூகங்களின் பிரதிநிதிகள் அனர்த்தம் தொடர்பான கூட்டங்களிலிருந்து விலக்கப்பட்டதுடன், அக்கூட்டங்களில் பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்களின் தேவைகள் பெரும்பாலும் கவனத்திற்கொள்ளப்படவில்லை.[91]

போதுமான நிவாரண விநியோகத்தை உறுதிசெய்வதற்கான பொறுப்பு அரசிடம் இருப்பதற்குப் பதிலாக, நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மக்களே போராட வேண்டிய நிலைக்குப் பொறுப்பு மாற்றப்பட்டமை, தனது பிரஜைகளைப் பராமரிப்பதில் அரசின் புறக்கணிப்பை எடுத்துக்காட்டுகிறது. மக்களையும் அவர்களது இழப்புகளையும் அரசு அங்கீகரிக்கத் தவறியமை, சேதங்களைப் பதிவுசெய்வதில் காணப்பட்ட கட்டமைப்பு ரீதியான தடைகள், அரச உத்தியோகத்தர்களின் உணர்வுபூர்வமற்ற அணுகுமுறை மற்றும் தன்னிச்சையான தீர்மானமெடுத்தல், அத்துடன் பாதிப்புறும் நிலையில் உள்ள மக்களைக் கவனிக்கப்படாதவர்களாகவும் அவர்களது குரல்கள் செவிமடுக்கப்படாதவையாகவும் ஆக்கிய கட்டமைப்புகள் ஆகியவற்றின் காரணமாக, பாதிக்கப்பட்ட பெருமளவான மக்களால் நிவாரண உதவிகளைப் பெற முடியாத நிலை ஏற்பட்டது.

---

83 Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026; Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026.

84 FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026; Interview with leading government officer A in Batticaloa District in February 2026; Interview with leading government officer B in Batticaloa District in February 2026; FGD with DS officers in Kalmunai in February 2026; Interview with GS B in Batticaloa District in February 2026; Interview with women's activist A in Batticaloa District in January 2026; Interview with women's activist C in Batticaloa District in February 2026.

85 Interview with woman B with a disability who is also an activist in Batticaloa District in February 2026.

86 Interview with women's activist C in Batticaloa District in February 2026; Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026.

87 FGD in Trincomalee District with ex-combatants, people with disabilities and staff from an association for people with disabilities in February 2026; Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026.

88 Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026.

89 Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026; FGD with DS officers in Kalmunai in February 2026.

90 Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026; Interview with two human rights activists who work in Trincomalee District in February 2026; Interview with women's activist A in Batticaloa District in January 2026; Stakeholder meeting with activists in Trincomalee District in May 2026; Interview with woman B with a disability who is also an activist in Batticaloa District in February 2026; Interview with woman A with a disability who is also an activist in Batticaloa District in February 2026; Interview with war-affected woman B in Amparai District in February 2026.

91 Interview with women's activist D in Batticaloa District in January 2026; Interview with women's activist C in Batticaloa District in February 2026; Interview with a female former combatant with a disability in Batticaloa District in January 2026; Stakeholder meeting with activists in Batticaloa District in May 2026.

## 7. இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையில்: முன்னணியில் உள்ள அரச அதிகாரிகள்

முன்னணிப் பணியாளர்கள் என்ற வகையில் தாங்கள் எதிர்கொண்ட பல்வேறு பாரதூரமான பிரச்சினைகளை அரச உத்தியோகத்தர்கள் சுட்டிக்காட்டினர். மாறிக்கொண்டிருந்ததும் தெளிவற்றதுமான அறிவுறுத்தல்கள் மற்றும் தெளிவாக வரையறுக்கப்படாத வகைப்படுத்தல்கள் போன்ற முறைமைசார் அழுத்தங்களை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதன் காரணமாக, நிவாரண விநியோகம் தொடர்பில் இறுதித் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய கடினமான நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர். மேலும், அறிக்கையிடுவதற்கான குறுகிய காலக்கெடுக்கள், போதிய பணியாளர்கள் இன்மை மற்றும் பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்கள் தொடர்பான தரவுகள் இல்லாமை போன்ற அனர்த்தத்திற்கு முன்னரே காணப்பட்ட முறைமைசார் தோல்விகள் இந்த அழுத்தங்களை மேலும் தீவிரப்படுத்தின.

சுற்றுநிருபங்களில் காணப்பட்ட தெளிவற்ற ஏற்பாடுகள், நிவாரணப் பணிகளுக்கு ஒரு முக்கிய சவாலாக அமைந்ததாக அரச உத்தியோகத்தர்கள் சுட்டிக்காட்டினர்.[92] மேலும், உண்மையான சேதங்களை மதிப்பீடு செய்து ஒவ்வொரு சம்பவத்தின் அடிப்படையிலும் நிதி ஒதுக்கீடு செய்யும் முறையிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட தொகைகளை வழங்கும் முறைக்கு மாற்றப்பட்டமை போன்ற மாற்றங்கள், நடைமுறைகளிலும் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய தேவையை ஏற்படுத்தியதுடன், கணக்காய்வுச் செயன்முறையையும் மேலும் சிக்கலாக்கின.[93] மேலும், பாதிப்பை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள் தெளிவற்றதாக இருந்தமையால், நிதி விநியோகம் தொடர்பில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய சுமையும் அவர்கள் மீது சுமத்தப்பட்டது.[94]

நிவாரணம் வழங்கப்பட வேண்டிய குறிப்பிட்ட பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்கள் குறித்து சுற்றுநிருபங்களில் குறிப்பிடப்படாததால்,[95] நிவாரண விநியோகத்திற்குத் தேவையான தரவுகளை வழங்க வேண்டிய பொறுப்பு கிராம சேவகர்களிடமே (GS) இருந்ததுடன், அவர்களது நிலைமை அறிக்கைகளே உத்தியோகபூர்வ அளவுகளுக்கு அடிப்படையாக அமைந்திருந்தன. இதன் காரணமாகத் தாங்கள் பின்பற்ற வேண்டியிருந்த மிகவும் கடினமான அறிக்கையிடல் கால அட்டவணை குறித்தும், அது தங்கள் மீது ஏற்படுத்திய அழுத்தம் குறித்தும் அரச உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.[96]

குறிப்பாக, அனர்த்த முகாமைத்துவத்தின் முன்னணியில் பணியாற்றிய கிராம சேவகர்கள் (GS), மக்களின் கோபத்தையும் நிர்க்கதி நிலையையும் நேரடியாக எதிர்கொள்ள வேண்டியிருந்ததுடன், அடிக்கடி வாய்மொழித் தாக்குதல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகினர்.[97] மன உளைச்சல், கடுமையான சோர்வு மற்றும் தாங்கள் தனித்து விடப்பட்டுள்ளோம் என்ற ஆழமான உணர்வு ஆகியவை முன்னணிப் பணியாளர்களிடையே பரவலாகக் காணப்பட்டன.[98]

அரசாங்கத்தின் தொடர்பாடல்கள் அவர்களது பணியை மேலும் சிக்கலாக்கின. உதாரணமாக, அரசாங்கம் சமூக ஊடகங்கள் ஊடாக தகவல்களைப் பரப்பியமை மக்களின் எதிர்பார்ப்புகளை அதிகரித்ததுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கும் வழிவகுத்ததாக அரச உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.[99]

எனவே, முன்னணியில் பணியாற்றிய அரச உத்தியோகத்தர்கள், அதிகாரத்துவ மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடுகள், பொதுமக்களின் எதிர்பார்ப்புகள், நிர்க்கதி நிலை மற்றும் கோபம் என்பவற்றை ஒரே நேரத்தில் எதிர்கொள்ள வேண்டியிருந்ததால், மிகவும் கடினமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். தேசிய மட்டத்திலான அனர்த்த முகாமைத்துவம் காரணமாக அரச உத்தியோகத்தர்கள் பல சவால்களை எதிர்கொண்டனர். குறிப்பாக, அதிக எண்ணிக்கையிலான சுற்றுநிருபங்கள் தமது பணிகளைத் தொடர்ச்சியாக மாற்றியமைக்க அவர்களை நிர்ப்பந்தித்ததுடன், தெளிவற்ற அளவுகோல்கள் யாருக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும், யாருக்கு வழங்கப்படக்கூடாது என்பது தொடர்பான தீர்மானங்களை அவர்களே மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளின. அனர்த்த முகாமைத்துவத்திற்கும் நிவாரண ஒதுக்கீட்டிற்கும் அடிப்படையாக அமையும் அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டிய அழுத்தமும் சுமையும் அவர்கள் மீது இருந்தபோதிலும், அதற்குத் தேவையான போதிய ஆதரவு அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

---

92 FGD with DS officers in Kalmunai in February 2026.

93 Interview with GS A in Batticaloa District in February 2026; Interview with leading government officer B in Batticaloa District in February 2026; Interview with leading government officer A in Batticaloa District in February 2026; Interview with GS B in Batticaloa District in February 2026; Government of Sri Lanka, Ministry of Finance, Planning and Economic Development, *Budget Circular 08/2025* (5th December 2025).

94 FGD with DS officers in Kalmunai in February 2026.

95 Interview with leading government officer A in Batticaloa District in February 2026; Interview with leading government officer B in Batticaloa District in February 2026.

96 Interview with leading government officer A in Batticaloa District in February 2026; Interview with GS A in Batticaloa District in February 2026; Interview with leading government officer B in Batticaloa District in February 2026; Interview with GS B in Batticaloa District in February 2026.

97 Interview with GS A in Batticaloa District in February 2026; Interview with leading government officer B in Batticaloa District in February 2026; Interview with GS B in Batticaloa District in February 2026.

98 Interview with GS A in Batticaloa District in February 2026; Interview with GS B in Batticaloa District in February 2026.

99 FGD with DS officers in Kalmunai in February 2026; Interview with leading government officer A in Batticaloa District in February 2026; Interview with leading government officer B in Batticaloa District in February 2026; Interview with GS B in Batticaloa District in February 2026.

## 8. உரிமை மீறல்களும் இயற்கை அனர்த்தங்களின் மனிதனால் உருவாக்கப்பட்ட பரிமாணமும்

எமது ஆய்வுச் சுருக்கம் எடுத்துக்காட்டுவது போன்று, இயற்கை அனர்த்தங்கள் வெளிப்படையான சமத்துவமின்மைகளை வெளிக்கொணர்வதுடன், முறைமைசார் தோல்விகளை அம்பலப்படுத்தி, உரிமை மீறல்களையும் வெளிப்படுத்துகின்றன. எனவே, இயற்கை அனர்த்தங்கள் எப்போதும் மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு பரிமாணத்தையும் கொண்டிருப்பதுடன், சமூக நீதி தொடர்பான விடயங்களுடன் உள்ளார்ந்த தொடர்பைக் கொண்டுள்ளன. எமது ஆய்வு பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தியுள்ளது:

**முதலாவதாக, சமூக, பொருளாதார மற்றும் மனித உரிமைகளின் மீறல்கள் பாதிப்புறும் நிலையை உருவாக்குகின்றன. இதனால், குறிப்பிட்ட சில மக்கள் ஆபத்துகளால் அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களாக மாறுவதுடன், அவற்றின் தாக்கங்களும் மேலும் தீவிரமடைகின்றன.** சமூக மற்றும் அரசியல் காரணிகளால் உருவாக்கப்பட்ட இந்தப் பாதிப்புறும் நிலை, அனர்த்தங்கள் மக்களை ஏன் சமமற்ற விதத்தில் பாதிக்கின்றன என்பதை விளக்குகிறது: காலநிலை மாற்றத்தின் மிகக் கடுமையான தாக்கங்களை எதிர்கொண்டு, வெள்ள அபாயம் நிறைந்த பகுதிகளில் வாழ வேண்டியவர்கள் யார்; வெள்ளப் பாதிப்பை மேலும் தீவிரப்படுத்தும் போதிய உட்கட்டமைப்பு வசதிகளற்ற பகுதிகளில் வசிக்க வேண்டியவர்கள் யார்; சட்டவிரோத மணல் அகழ்வினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுபவர்கள் யார்; போரினால் ஏற்பட்ட இயலாமை காரணமாக ஆபத்தான இடத்திலிருந்து வெளியேற முடியாதவர்கள் யார்; தொலைதூரப் பகுதிகளில் உணவின்றிச் சிக்கித் தவிப்பவர்கள் யார்; அன்புக்குரிய ஒருவர் கொல்லப்பட்டமை அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை காரணமாக ஒரே இரவில் குடும்பத்தின் உழைத்து வருமானம் ஈட்டுபவரின் பொறுப்பை ஏற்க நிர்ப்பந்திக்கப்படுபவர்கள் யார்; காணிகள் இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளதால் ஆபத்தான இடங்களில் கால்நடைகளை மேய்க்க வேண்டியவர்கள் யார்; போதுமான உணவைப் பெற்றுக்கொள்வதற்காக வீட்டுத் தோட்டங்களை நம்பியிருக்க வேண்டியவர்கள் யார்; உயிர்வாழ்வதற்காக கோழிகளை வளர்க்கவும், சிறிய காணித் துண்டொன்றில் பயிர்செய்யவும் அல்லது நாளாந்தக் கூலி வேலைகளில் ஈடுபடவும் வேண்டியவர்கள் யார்; திருத்துவதற்கான எந்த வசதியும் இல்லாத நிலையில் கூரையிலிருந்து நீர் ஒழுகும் வீட்டில் வாழ்பவர்கள் யார்; போரின் காரணமாக அவசரத் தேவைகளின்போது நம்பியிருக்கக்கூடிய வளங்கள் எதுவும் இல்லாதவர்கள் யார்; காணி உறுதியின்றி ஒரு காணியில் வாழ வேண்டியவர்கள் யார்; அரசினால் உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டு ஆழமான மனவதிர்ச்சியைச் சுமந்து வாழ்பவர்கள் யார் என்பவற்றை இந்தப் பாதிப்புறும் நிலை வெளிப்படுத்துகிறது. அதேவேளை, நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தடையாக அமையும் கட்டமைப்பு ரீதியான தடைகள், மக்களின் பாதிப்புறும் நிலையை மேலும் அதிகரிக்கின்றன.

**இரண்டாவதாக, அனர்த்த முகாமைத்துவம் அரசுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான உறவுகளை வெளிப்படுத்துவதுடன், தற்போதைய மற்றும் கடந்தகால பாரபட்சம், ஒதுக்கிவைத்தல் மற்றும் அரசின் புறக்கணிப்பு ஆகியவற்றையும் அம்பலப்படுத்துகிறது.** உதவிகள் எவ்வாறு, எங்கு அரசியல்மயப்படுத்தப்படுகின்றன; நிவாரண நடவடிக்கைகளில் எந்தக் குழுக்கள் கவனிக்கப்படாமலும் விலக்கப்பட்டும் உள்ளன; அரசினால் மேற்கொள்ளப்படும் பாரபட்சம் எவ்வாறு காணப்படுகிறது; யாருடைய இழப்புகள் கவனிக்கப்படாதவையாகவும் யாருடைய தேவைகள் செவிமடுக்கப்படாதவையாகவும் ஆக்கப்படுகின்றன; கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் அரசின் மீது யாருக்கு அவநம்பிக்கை அல்லது அச்சம் நிலவுகிறது; உயிர்காக்கும் தகவல்கள் யாருக்குக் கிடைக்கின்றன, யாருக்குக் கிடைப்பதில்லை; அனர்த்தங்களைப் போதுமான முறையில் திட்டமிட்டு அவற்றுக்குத் தயாராவதன் மூலம் தனது பிரஜைகளைப் பாதுகாக்க வேண்டிய கடமைகளை அரசு எந்தளவிற்கு நிறைவேற்றுகிறது; மற்றும் நிவாரணச் செயன்முறைகள் சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டுள்ள உறுப்பினர்களின் நிலை மற்றும் தேவைகளைக் கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளனவா இல்லையா என்பவற்றை இது வெளிப்படுத்துகிறது.

**மூன்றாவதாக, போதியளவில் இல்லாத அனர்த்த முகாமைத்துவம் உணர்வு ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன், காலப்போக்கில் குவிந்துள்ள மனவதிர்ச்சிகளும் சிரமங்களும் அனர்த்தங்களின் தாக்கங்களை மேலும் தீவிரப்படுத்துகின்றன.** எமது நேர்காணல்களில், அரச தரப்பினரால் மக்களின் பாதிப்புறும் நிலை சாதாரணமான ஒன்றாகக் கருதப்பட்டமை; அரச உத்தியோகத்தர்களிடமிருந்து எதிர்கொண்ட உணர்வுபூர்வமற்ற மற்றும் பகைமையான அணுகுமுறைகள்; அரசின் புறக்கணிப்பு; நிவாரண நடவடிக்கைகளில் கவனிக்கப்படாமல் விடப்பட்டு, உதவி வழங்கும் கட்டமைப்புகளின் இடைவெளிகளுக்குள் சிக்கிக்கொண்டமை; மற்றும் உயிர்வாழ்வதற்கான தொடர்ச்சியான, ஓய்வற்ற போராட்டம் ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்ட விரக்தியையும் சோர்வையும் நாம் கேட்டறிந்ததுடன் நேரடியாகவும் கண்டோம். பெண்களைப் பொறுத்தவரையில், குறிப்பாக இயலாமை கொண்ட பெண்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் குடும்பங்களுக்குத் தலைமை தாங்கும் பெண்கள் உள்ளிட்ட போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் நிலை மேலும் தீவிரமடைகிறது. அவர்கள் பெரும்பாலும் மும்மடங்கான சுமையைச் சுமக்கின்றனர்: ஏனையவர்களைப் பராமரிப்பவர்களாகவும், அனர்த்தங்களின்போது முழுக் குடும்பத்திற்குமான பொறுப்பை ஏற்றுக்கொள்பவர்களாகவும் இருப்பதுடன்; பெரும்பாலும் முறைசாரா மற்றும் நிலையற்ற தொழில்களில் ஈடுபடுபவர்களாகவும் மற்றும்/அல்லது வாழ்வாதாரத்திற்காக வீட்டுத் தோட்டங்கள் அல்லது சிறிய காணித் துண்டுகளை நம்பியிருப்பவர்களாகவும் இருக்கின்றனர் — இத்தகைய வாழ்வாதாரங்கள் டித்வா புயலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன; அத்துடன், போரின் விளைவாக வீடுகளை, அன்புக்குரியவர்களை அல்லது உடல் உறுப்புகளை இழந்ததால் ஏற்பட்ட மனவதிர்ச்சியையும் சமூக-பொருளாதாரச் சுமையையும் சுமப்பவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர்.

**நான்காவதாக, கட்டமைப்பு ரீதியான தடைகள், முறைமைசார் தோல்விகள் மற்றும் நிவாரண உதவிகளை வழங்குவதில் காணப்படும் சமத்துவமின்மை ஆகியவை கட்டமைப்பு ரீதியான வன்முறைகளாக ஆகின்றன.** இதன் விளைவாக, அனர்த்த முகாமைத்துவம் சமூக நீதி தொடர்பான விடயங்களுடன் உள்ளார்ந்த வகையில் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளதுடன், அவ்விடயங்கள் பரந்த வரலாற்றுப் பின்னணியிலும் நோக்கப்பட வேண்டியவையாகும். ஆழமாக வேரூன்றியுள்ள சமத்துவமின்மைகள், முறைமைசார் பாரபட்சப் போக்குகளை ஏற்படுத்தும் மற்றும் பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் அரச சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் தடையாக உள்ள கட்டமைப்பு ரீதியான தடைகளின்ன் தாக்கங்கள் அனர்த்தங்களின்போது வெளிப்படுகின்றன. எனவே, அவை கடந்த காலத்தில் நிலவிய மற்றும் நிகழ்காலத்தில் நிலவும் அநீதிப் போக்குகளையும் பொறுப்புக்கூறல் இன்மையையும் வெளிப்படுத்துகின்றன. எனவே, ஒன்றுடன் ஒன்று குறுக்கிடும் பாதிப்புறும்

நிலைகள் கவனத்திற்கொள்ளப்படாமலும், கடந்தகால உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் உறுதிசெய்யப்படாமலும் இருக்கும்போது, அனர்த்தங்கள் கட்டமைப்பு ரீதியான வன்முறையை மேலும் தீவிரப்படுத்துகின்றன.

## 9. எதிர்வினை மற்றும் தற்காலிகத் தீர்விலிருந்து முன் தடுத்தல் மற்றும் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தத்தை நோக்கி: பரிந்துரைகள்

***அனர்த்த முகாமைத்துவத்தில் சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு அணுகுமுறையைப் பின்பற்றுதல்***

- இயலாமை கொண்டவர்கள், பெண்கள், முன்னாள் போராளிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள், முறைசாராப் பொருளாதாரத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட சாதிச் சமூகங்கள் உள்ளிட்ட பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்களுக்கான விசேட ஏற்பாடுகளை வகுத்தல்
- தேவைகளை மதிப்பீடு செய்வதற்கு கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறைகளைப் பின்பற்றுதல்
- பெண்கள், இயலாமை கொண்டவர்கள் மற்றும் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் உள்ளிட்ட பங்குதாரர்களின் உள்ளீடுகள் மற்றும் பங்களிப்புகளின் அடிப்படையில் நிவாரணத் திட்டங்களை வடிவமைத்தல்
- முறைசாராத் துறையில் பணியாற்றுபவர்களை வெளிப்படையாக உள்ளடக்கும் வகையில் நிவாரண வகைப்பாடுகளைத் திருத்தியமைத்தல் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான நிருவாகத் தடைகளை நீக்குதல்.
- திட்டமிடல், தீர்மானமெடுத்தல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் ஆகியவற்றில் செயற்பாட்டாளர்களையும் அடிமட்ட அமைப்புகளையும் ஒருங்கிணைத்தல்
- அனர்த்த முகாமைத்துவத்தில் பெண்கள் மற்றும் இயலாமை கொண்டவர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்தல்
- நிவாரண உதவிகளை வழங்குவதற்குத் தடையாக உள்ள அதிகாரத்துவத் தடைகளை அகற்றுதல்
- வெள்ளத்தால் வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் மற்றும் உணவு உடனடியாக வழங்கப்படுவதை உறுதிசெய்தல்
- கிராம சேவகர் (GS) பிரிவு மட்டத்தில் பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்கள் தொடர்பான தரவுகளை ஆண்டு முழுவதும் சேகரித்தல் மற்றும் புதுப்பித்தல்
- நிகழ்நேர நிலைமை தொடர்பான தகவல்களைப் புதுப்பிப்பதற்கான முறைமையை மேம்படுத்துதல்
- இயலாமை கொண்டவர்களால் அணுகக்கூடியதாகவும், பெண்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதாகவும் முகாம்களை அமைத்தல்
- வெள்ள அபாயம் நிறைந்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு மீள்குடியேறுவதற்காக மாற்றுக் காணித் துண்டுகளை வழங்குதல்
- தேசிய மொழிக் கொள்கையைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதுடன், சுற்றுநிருபங்கள், தகவல்கள், வானிலை முன்னறிவிப்புகள் போன்றவை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்படுவதை உறுதிசெய்தல்
- பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் அனர்த்த முகாமைத்துவ திட்ட வரைபுகளை உருவாக்குதல்
- டித்வா புயலுக்கான பதில் நடவடிக்கைகளில் ஏற்பட்ட தோல்விகளைப் பகுப்பாய்வு செய்து, அவற்றுக்குப் பொறுப்புக்கூறுதல்

***பாரபட்சம், ஒதுக்கிவைத்தல் மற்றும் அரசின் புறக்கணிப்பு என்பவற்றை நிவர்த்தி செய்தல்***

- இயலாமை கொண்டவர்களுக்கான சங்கங்கள் செயற்படுவதை உத்தரவாதப்படுத்தல்
- இயலாமை கொண்டவர்கள் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கு காணப்படும் தடைகளை அகற்றுதல்
- காணாமற்போனமைக்கான சான்றிதழ் (Certificate of Absence) அங்கீகரிக்கப்படுவதை உறுதிசெய்து, அதன் செல்லுபடித்தன்மையை விரிவாக்குதல்
- பெண்களின் சமூக-பொருளாதாரப் பாதிப்புறும் நிலையை நிவர்த்தி செய்வதன் மூலம் அவர்களின் சுயாதீனத்தை வலுப்படுத்துதல் (உதாரணமாக, பராமரிப்புக் கொடுப்பனவு தொடர்பான வழக்குகளைத் துரிதப்படுத்தி, கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதை அமுல்படுத்துதல்; முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தை (MMDA) சீர்திருத்துதல்; பெண்களின் சிறிய அளவிலான வணிகங்களுக்கான ஆதரவுத் திட்டங்களை ஏற்படுத்துதல்; நுண்நிதிச் சட்டமூலத்தை மீளாய்வு செய்தல்; அஸ்வெசும தொடர்பாக சிவில் சமூகத்தினால் முன்வைக்கப்படும் விமர்சனங்களை நிவர்த்தி செய்தல்; மேலும் பாதுகாப்பான இல்லங்களை நிறுவுதல்...)
- பொதுவான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- சிறிய அளவிலான வர்த்தகங்களை வரிவிலக்குடன் பதிவுசெய்வதற்கு வழிவகை செய்தல்
- ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு நில உறுதிகளை வழங்குதல்
- முன்னாள் போராளிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களை உளவு பார்ப்பதை நிறுத்துதல்
- பாதிப்புறும் நிலையில் உள்ள குழுக்களின் உரிமை மீறல்களை நிவர்த்தி செய்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் (CSOs) ஒத்துழைத்தல்
- மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் நிலவும் நிர்வாகப் பிரச்சினைகள் மற்றும் பாரபட்சத்தை நிவர்த்தி செய்தல்

- அரச சேவைகள் சமத்துவமானதும் ஒப்புரவானதுமான முறையில் வழங்கப்படுவதை நடைமுறைப்படுத்தி உறுதிசெய்வதன் மூலம், ஆட்சியில் காணப்படும் வேண்டியவர்களுக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் பாரபட்சம் ஆகியவற்றைத் தடுத்தல்
- தமிழ் மொழி பேசுபவர்களுக்கு அரசியலமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்ட மொழி உரிமைகளை நடைமுறைப்படுத்தி உறுதிசெய்தல்

**கட்டமைப்பு ரீதியான தடைகள், முறைமைசார் தோல்விகள் மற்றும் ஒப்புரவின்மை என்பவற்றை நிவர்த்தி செய்தல்**

- பாதுகாப்புப் படைகள் மற்றும் அரச முகவரமைப்புகளால் (உதாரணமாக, வனப் பாதுகாப்புத் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு) ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவித்தல்
- இராணுவமயமாக்கலை அகற்றுவதுடன் கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களைப் படிப்படியாக மூடுதல்
- பிரஜா சக்தியை அரசியல்மயமற்றதாக்குதல்: உறுப்பினர்களையும் தவிசாளர்களையும் தெரிவுசெய்வதற்கான ஜனநாயக நடைமுறைகளை உறுதிசெய்தல்; பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கும் சமாந்தரமான கட்டமைப்புகள் உருவாவதைத் தவிர்ப்பதற்கும் அதனை ஏற்கனவே உள்ள ஆளுகைக் கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல்; அதனை முழுமையாகப் பிரதேச செயலகங்களின் கீழ் கொண்டுவருதல்; மற்றும் அரசியல் தலையீடுகளை நிறுத்துதல்.
- கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தி, அது சுயாதீனமாகச் செயற்படுவதை உத்தரவாதப்படுத்துதல்.
- நிவாரணத் திட்டங்கள், பதிவுசெய்யும் செயன்முறை போன்றவற்றில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்வதுடன் தகவல் பாய்ச்சலையும் மேம்படுத்துதல்
- உள்ளூர் தரப்பினரையும் கட்டமைப்புகளையும் மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்துவதன் மூலம் அரச உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துதல் (உதாரணமாக, சுயாதீனமான பிரதேச அல்லது மாவட்ட கண்காணிப்புக் குழுக்களின் மூலமாக நிவாரண நடவடிக்கைகளை வெளியகக் கண்காணிப்புக்கு உட்படுத்துதல்)
- சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- நெருக்கடி நிலைமைகள் இல்லாத காலங்களிலும் அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் முறையாகச் செயற்படுவதையும், தொடர்ச்சியாக ஒன்று கூடுவதையும் உறுதிசெய்தல்
- அனர்த்தச் சூழ்நிலைகளில் கிராம சேவகர்களுக்கான (GS) ஆதரவு முறைமைகளை ஏற்படுத்துதல் (உதாரணமாக, அனர்த்தங்களின்போது கிராம சேவகர் பிரிவுகளைப் பிரித்து பணிகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை அணுகுவதில் சமூக சேவை உத்தியோகத்தர்கள் (SSOs) உள்ளிட்ட ஏனைய உத்தியோகத்தர்களையும் ஒருங்கிணைத்தல்)